بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 7 | இதழ் 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

15 ரஜப் 1443 ஹிஜ்ரி கமரி 17 தப்லீக் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 17 பிப்ரவரி 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَيَوۡمَ نَحۡشُرُهُمۡ جَمِيۡعًا ثُمَّ نَقُوۡلُ لِلَّذِيۡنَ اَشۡرَكُوۡۤا اَيۡنَ شُرَكَآؤُكُمُ الَّذِيۡنَ كُنۡتُمۡ تَزۡعُمُوۡنَ

ஒரு நாள், நாம் அவர்கள் எல்லாரையும் ஒன்று சேர்த்து (இறைவனுக்கு) இணை வைத்தவர்களிடம் நீங்கள் உறுதியாக வாதித்த இணைகள் எங்கே? என்று நாம் கேட்போம் (அந்நாளை நினைத்துப் பாருங்கள்). (6:23)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று மனிதன் கூறும்போது மற்ற அனைத்தும் அவனது பார்வைகளில் பொருளற்றதாக ஆகி விடுகின்றது. மேலும் அவன் தைரியத்துடன் பணி செய்கின்றான்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

அன்னார் (அலை) கூறினார்கள்: இரவும் பகலும் முஸ்லிம்கள் கலிமா தய்யிபா கூற வேண்டும் என்று வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது. அதன் காரணம் என்னவென்றால், அதுவன்றி மனிதனிடத்தில் எந்த வீரமும் உருவாக முடியாது. மனிதன் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறும்போது மற்ற அனைத்து மனிதர்களும், பொருட்களும், ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், எதிரிகளும், நண்பர்களும், ஆற்றல்களும், வலிமைகளும் பொருளற்றதாக மாறி விடுகின்றது. அந்நிலையில் மனிதன் அல்லாஹ்வை மட்டுமே காண்கின்றான். அவனைத் தவிர்த்து மற்ற அனைத்தும் அவனது பார்வைகளில் பொருளற்றதாக ஆகி விடுகின்றது. எனவே அந்த மனிதன் தைரியத்துடனும், வீரத்துடனும் பணி செய்கின்றான். அச்சமூட்டும் எவரும் அவனை அச்சத்திற்குள்ளாக்க முடியாது.

### அகப்பார்வை

கூறினார்கள்: அகப்பார்வையும் ஒரு முக்கிய விஷயமாகும். உதாரணமாக ஒரு யூதர் பார்த்த உடனேயே இவரிடத்தில் நபித்துவத்தின் அடையாளங்களை நான் காண்கின்றேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறி விட்டார். அதேபோன்று முபாஹிலாவின் நேரத்தில் கிறிஸ்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்களுக்கு எதிராக போட்டிக்கு வரவில்லை. ஏனென்றால் அவர்களின் ஆலோசகர் அவர்களிடம் இந்த விஷயத்தை கூறி இருந்தார். அதாவது நான் எப்படிப்பட்ட முகத்தை பார்க்கின்றேன் என்றால் அவர் மலையை நோக்கி இங்கிருந்து அகன்று விடு என்று கூறினால் அது அகன்று விடும். ஒருவருடைய உள்ளத்தில் ஆன்மீகத்தின் ஏதேனும் பங்கு இருக்குமென்றால் அவர் என்னை ஒப்புக் கொண்டு விடுவார்.

நல் உபதேசம் செய்வதற்கு ஒரு புத்தகத்தை எழுத வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். மேலும் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அதனை மொழியாக்கம் செய்ய வேண்டும். அந்தப் புத்தகத்திற்கு மூன்று பகுதிகள் இருக்கும். அல்லாஹ்வின் மீது நமது கடமைகள் என்ன?

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

## நீங்கள் எவர்களை வணங்குகின்றீர்களோ அவர்கள் அனைவரும் மரணித்து விட்டனர். அவ்வாறிருக்க அவர்கள் எவ்வாறு நேர்வழி காட்டுபவர்களாக இருக்க முடியும்? படைப்பாளனாக இருப்பது மட்டுமின்றி நேர்வழி வழங்கக் கூடியவர் உயிருடன் இருப்பதும் அவசியமாகும். அப்போது தான் ஏதாவது சீர்கேடு ஏற்பட்டால் அவர் அதனை சீர் செய்ய முடியும்

وَالَّذِيۡنَ يَدۡعُوۡنَ مِنۡ دُوۡنِ اللّٰهِ لَا يَخۡلُقُوۡنَ شَيۡـًٔا وَّهُمۡ يُخۡلَقُوۡنَ ۝ اَمۡوَاتٌ غَيۡرُ اَحۡيَآءٍ ۚ وَمَا يَشۡعُرُوۡنَ ۙ اَيَّانَ يُبۡعَثُوۡنَ ۝ (16:21,22)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா அந்–நஹ்லின் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

மறைவான ஞானம் படைத்தவனைத் தவிர வேறு எவருக்கும் இருக்க முடியாது. படைத்தவனே தனது படைப்பினத்தின் உள்ளார்ந்த ஆற்றலையும், அவற்றின் செயல்களையும் அறிந்தவனாக இருக்க முடியும். மற்றவர்களால் அறிய முடியாது. ஒருவேளை அறிந்திருந்தால் அவ்வாறு அறிந்தவன் படைத்தவனாக ஆகி விடுவான். ஆனால் நீங்கள் எவர்களை வணங்குகின்றீர்களோ அவர்கள் படைத்தவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் அனைவரும் சுயமே படைக்கப்பட்டுள்ளார்கள்.

இறைவன் மட்டுமின்றி மற்ற ஏனைய இருப்புகளும் மறைவான ஞானத்தை அறிந்திருக்கின்றன என்ற வாதம் மிக நுட்பமான முறையில் இந்த வசனத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், இந்த போதனை இருக்கும் பட்சத்திலும் முஸ்லிம்களின் ஒரு பிரிவு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கும் மறைவான ஞானம் இருந்தது என்று எண்ணுகின்றது. மேலும் அவர் பறவைகளையும் படைத்து வந்தார் என்று நம்புகின்றது. உள்ளபடியே அல்லாஹ் இந்த இடத்தில் தெளிவாக கூறி விட்டான். அல்லாஹ்வைத் தவிர்த்து எந்த அளவிற்கு ஏனைய விஷயங்கள் வணங்கப்படுகின்றனவோ அவற்றில் ஒன்று கூட எந்த ஒன்றையும் படைப்பதற்கு ஆற்றல் பெற்றிருக்கவில்லை.

லட்சக்கணக்கான மற்றும் கோடிக்கணக்கான மனிதர்கள் வணங்குகின்ற பொய் தெய்வங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் ஒருவராக இருக்கின்றார். படைப்பாளனாக இருப்பது மட்டுமின்றி நேர்வழி வழங்கக்

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

## நபிமொழி

### மதீனாவின் புனிதம்

1867: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மதீனா நகரம் புனிதமானதாகும்! எந்த அளவுக்கென்றால் அங்குள்ள மரங்கள் வெட்டப்படக் கூடாது; அங்கே (மார்க்கத்தின் பெயரால்) புதியது எதுவும் உருவாக்கப்படக் கூடாது! (மார்க்கத்தின் பெயரால்) புதிய (செயல்) ஒன்றை ஏற்படுத்துகிறவர் மீது அல்லாஹ்வுடைய வானவர்கள் மற்றும் மக்கள் அனைவரின் சாபமும் ஏற்படும்.

1868: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது பள்ளிவாசல் கட்டுமாறு கட்டளையிட்டார்கள். பனூ நஜ்ஜார் கோத்திரத்தினரே! (இந்த இடத்தை) எனக்கு விலைக்கு தாருங்கள் என்று கேட்டார்கள். பனூ நஜ்ஜார் கோத்திரத்தினர், இதற்குரிய விலையை அல்லாஹ்விடம் மட்டுமே நாங்கள் பெறுவோம் என்றனர். (அவ்விடத்திலிருந்த) இணை வைப்பவர்களின் கப்ருகளைத் தோண்டுமாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவை தோண்டப்பட்டு எலும்புகள் போன்றவை வெளியேற்றப்பட்டன. அன்னாரின் கட்டளையின்படியே பாழடைந்த இடங்கள் சீர் செய்யப்பட்டன. பேரீச்ச மரங்கள் தொடர்பாக அன்னார் (ஸல்) கூறினார்கள். அவை வெட்டப்பட்டன. பள்ளிவாசலின் கிப்லா திசையில் (வெட்டப்பட்ட) பேரீச்ச மரங்கள் வரிசையாக வைக்கப்பட்டன.

(ஸஹீஹ் புகாரி தொகுதி 3, கிதாப் ஃபளாயீலுல் மதீனா – 2008 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 14 ஜனவரி 2022 (முழுவதுமாக)*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நியூஸிலாந்து பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை 2013*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**சுராக்காவே! உமது கரங்களில் கிஸ்ரா பேரரசனின் காப்புகள் இருக்கும்போது உமது நிலை என்னவாக இருக்கும்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுராக்காவிடம் கேட்டார்கள். சுராக்கா மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாகி ஈரானிய பேரரசனான கிஸ்ரா பின் ஹுர்முஸா? என்று கேட்டார். அதற்கு ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். சுராக்காவின் கண்கள் உறைந்து விட்டன. அரபு பாலைவனத்தின் ஒரு காட்டரபி எங்கே? ஈரானிய பேரரசன் கிஸ்ராவின் காப்பு எங்கே? என்று ஆச்சரியமடைந்தார். ஆனால் இறை வல்லமையை பாருங்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஈரான் வெற்றி கொள்ளப்பட்டது. மேலும் கிஸ்ராவின் கருவூலங்கள் போர் செல்வங்களாக முஸ்லிம்களின் கைகளுக்கு வந்தன. அப்போது கிஸ்ரா பேரரசனின் காப்பும் முஸ்லிம்களின் கைகளுக்கு வந்தது. அது விலை மதிக்க முடியாத ஆபரணங்களால் நிறைந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு முஸ்லிமாகியிருந்த சுராக்காவை அழைத்து தமக்கு முன்னால் அவரது கைகளில் அந்த காப்பை அணிவித்தார்கள்**

**8 நாட்கள் பயணம் செய்தவாறு இறை உதவிகளுடன் இறுதியில் திங்கட்கிழமையன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் பாதையான குபா எனும் இடத்தை வந்தடைந்து விட்டார்கள். திங்கட்கிழமையன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். திங்கட்கிழமையன்று மக்காவிலிருந்து புறப்பட்டார்கள். திங்கட்கிழமையன்று மதீனா வந்தடைந்தார்கள். மேலும் திங்கட்கிழமையன்று அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள் என்று ஹதீஸில் வந்துள்ளது**

**ஏனைய இறைவழி கைதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 ஜனவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **14 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவிற்கு முந்தைய குத்பாவில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்றிருந்தது. அதில் பரிசு பெற வேண்டும் என்ற பேராசையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பிடிக்கும் எண்ணத்துடன் சுராக்காவும் புறப்பட்டிருந்தார். ஆனால் இறைநியதி அவருக்கு முன்னால் தடைகளை ஏற்படுத்தியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அரசாங்கம் அமையும்போது தனக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று எழுதித் தரும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவர் விண்ணப்பித்திருந்தார். சுராக்கா பற்றிய இந்த குறிப்பும் அந்த குத்பாவில் இடம் பெற்றிருந்தது.

இது தொடர்பாக சில அறிவிப்புகளும் உள்ளன. ஓர் அறிவிப்பிற்கேற்ப அவர் திரும்பிச் செல்லும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், சுராக்காவே! கிஸ்ராவின் காப்புகள் உமது கரங்களில் இருக்கும்போது உமது நிலை எப்படி இருக்கும்? என்று கூறினார்கள். சுராக்கா மிகவும் ஆச்சரியத்துடன் திரும்பினார். மேலும் கிஸ்ரா பின் ஹுர்முஸா? என்று கேட்டார். அப்போது ஆம்! அதே கிஸ்ரா பின் ஹுர்முஸ் தான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கிஸ்ரா பேரரசனின் காப்புகளும், அவனது கிரீடமும், அவனது உடைகளும் கொண்டு வரப்பட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுராக்காவை அழைத்தார்கள். மேலும் உமது கரத்தை உயர்த்துங்கள் என்று கூறி அவருக்கு காப்புகளை அணிவித்தார்கள். மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவனே கிஸ்ரா பின் ஹுர்முஸிடமிருந்து இந்த இரண்டையும் பறித்து நமக்கு வழங்கியுள்ளான் என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஹம்மது ரஸூலுல்லாஹ்... தொகுதி 3 பக்கம் 65 – மிஸ்ரில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரத் பயணத்தின்போது இது நடக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் மற்றும் தாயிஃப் நகரத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது சுராக்கா பின் மாலிக் ஜிஃரானா என்ற இடத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். ஜிஃரானா என்ற இடம் மக்கா மற்றும் தாயிஃப் நகரத்தின் வழியில் அமைந்துள்ள மக்காவிற்கு மிகவும் நெருக்கமான (ஒரு) கிணற்றின் பெயராகும். அப்போது கிஸ்ராவின் காப்புகளை நீர் அணியும்போது உமது நிலை எப்படி இருக்கும்? என்று சுராக்காவிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி – அல்கர்மானி விளக்கவுரை தொகுதி 4, பக்கம் 178, கிதாப் பத்வுல் கல்க், பாடம் அலாமதுன் நுபுவ்வத் ஃபில் இஸ்லாம்)

இது தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: தற்போது அன்னார் (ஸல்) அவர்கள் சிறிது தூரமே சென்றிருந்தார்கள். அந்நிலையில் ஒரு நபர் வேகமாக குதிரையை ஓட்டிக் கொண்டு தமக்குப் பின்னால் வருவதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பார்த்து விட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒரு நபர் நம்மைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்து கூறினார்கள். அப்போது எந்தக் கவலையும் வேண்டாம். அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்தொடரக் கூடிய அந்த நபர் சுராக்கா பின் மாலிக் ஆக இருந்தார். தான் பின்தொடர்ந்து வந்தவற்றை சுயமே தமது சொற்களில் அவர் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறி விட்டபோது குரைஷிய காஃபிர்கள் இவ்வாறு அறிவித்தனர். அதாவது எவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை அல்லது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துக் கொண்டு வருவாரோ அவருக்கு மாபெரும் பரிசு வழங்கப்படும். மேலும் இதனை அறிவித்தார்கள். மேலும் அவர்கள் தமது தூதுவர்கள் மூலம் எங்களுக்கு தகவலும் கொடுத்தார்கள். இவ்வாறு சுராக்கா கூறுகின்றார்.

இதன் பிறகு ஒரு நாள் நான் பனூ முத்லஜ் என்ற எனது கோத்திரத்தின் ஒரு சபையில் அமர்ந்திருந்தேன். அப்போது குரைஷியர்களின் அந்த இரண்டு நபர்களில் ஒருவர் எங்களிடம் வந்தார். மேலும் நான் தற்போது தான் கடற்கரை ஓரத்தின் திசையில் தொலைவிலிருந்து சில முகங்களை கண்டேன் என்று அவர் என்னிடம் கூறினார். மேலும் ஒருவேளை அவர்கள் முஹம்மது (ஸல்) மற்றும் அவரது தோழர்களாக இருக்கக் கூடும் என்றும் கூறினார். நிச்சயம் அவர்களாகவே இருப்பார்கள் என்பதை உடனடியாக நான் புரிந்து கொண்டேன் என்று சுராக்கா கூறுகின்றார்.

அடுத்து, பின்தொடர்ந்து வந்த நேரத்தில் சுராக்காவின் குறி அவரது எண்ணத்திற்கு எதிராக வந்தது மற்றும் அவரது குதிரை மண்ணில் சிக்கிக் கொண்டது தொடர்பாக கூறப்பட்ட அதே விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள். எவ்வாறிருப்பினும் சுராக்கா கூறுகின்றார்: என்னுடன் நடந்த சம்பவங்களை வைத்து இந்த நபர் வெற்றி பெற இருக்கின்றார் என்பதை நான் புரிந்து கொண்டேன். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதியில் வெற்றி பெற்று விடுவார்கள். எனவே நான் சமாதானத்தின் வடிவில் பேசினேன். அதாவது தங்களை கொலை செய்வதற்கோ அல்லது உயிருடன் பிடித்து வருவதற்கோ ஒரு பெரும் பரிசை சமுதாயத்தினர் அறிவித்துள்ளனர். மேலும் மக்கள் உங்களைப் பற்றி இன்ன இன்ன எண்ணம் கொண்டுள்ளனர். நானும் அதே எண்ணத்துடன் தான் வந்தேன். ஆனால் தற்போது திரும்பிச் செல்கின்றேன் என்று சுராக்கா கூறினார்.

பின்னர் சுராக்காவின் ஏனைய விளக்கங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதன் பிறகு சுராக்கா காப்பு அணிவது தொடர்பான முன்னறிவிப்பை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: சுராக்கா திரும்பிச் செல்ல முற்பட்டபோது சுராக்காவே! உமது கரங்களில் கிஸ்ரா பேரரசனின் காப்புகள் இருக்கும்போது உமது நிலை என்னவாக இருக்கும்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுராக்காவிடம் கேட்டார்கள். சுராக்கா மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாகி ஈரானிய பேரரசனான கிஸ்ரா பின் ஹுர்முஸா? என்று கேட்டார். அதற்கு ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். சுராக்காவின் கண்கள் உறைந்து விட்டன. அரபு பாலைவனத்தின் ஒரு காட்டரபி எங்கே? ஈரானிய பேரரசன் கிஸ்ராவின் காப்பு எங்கே? என்று ஆச்சரியமடைந்தார். ஆனால் இறை வல்லமையை பாருங்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஈரான் வெற்றி கொள்ளப்பட்டது. மேலும் கிஸ்ராவின் கருவூலங்கள் போர் செல்வங்களாக முஸ்லிம்களின் கைகளுக்கு வந்தன. அப்போது கிஸ்ரா பேரரசனின் காப்பும் முஸ்லிம்களின் கைகளுக்கு வந்தது. அது விலை மதிக்க முடியாத ஆபரணங்களால் நிறைந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு முஸ்லிமாகியிருந்த சுராக்காவை அழைத்து தமக்கு முன்னால் அவரது கைகளில் அந்த காப்பை அணிவித்தார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 240 – 242)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது அந்த மக்கள் அதாவது மக்காவாசிகள் இவ்வாறு அறிவிப்பு செய்தனர். அதாவது முஹம்மது (ஸல்) அவர்களை அல்லது அபூபக்ரை எவர் உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வருவாரோ அவருக்கு 100 ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும். இந்த அறிவிப்பின் செய்தி மக்காவை சுற்றி இருக்கின்ற கோத்திரங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. எனவே அப்போது ஒரு காட்டரபி கூட்டத்தின் தலைவரான சுராக்கா பின் மாலிக் இந்த பரிசை பெற வேண்டும் என்ற பேராசையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து வந்தார். அவர் தேடித் தேடி இறுதியில் மதீனாவின் வீதியில் அன்னார் (ஸல்) அவர்களை கண்டு கொண்டார். அந்த இரண்டு ஒட்டகங்களையும் அதன் சவாரிகளையும் பார்த்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் தோழர்கள் இருந்ததை அவர் புரிந்து கொண்டார். எனவே தமது குதிரையை அவர்களுக்குப் பின்னால் ஓடச் செய்தார்.

அடுத்து அன்னார் (ரலி) அவர்கள் சுராக்கா குதிரையிலிருந்து தடுமாறி கீழே விழுந்தது மற்றும் குறி பார்த்த அந்த விவகாரங்களைக் குறித்து முழு சம்பவத்தையும் விரிவாக கூறுகின்றார்கள். சுராக்கா கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ணியத்துடன் தமது ஒட்டகத்தின் மீது சவாரி செய்து கொண்டிருந்தார்கள். அன்னார் என்னை திரும்பிக் கூட பார்க்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற அச்சத்தால் மீண்டும் மீண்டும் என்னை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த பின்தொடர்தல் சம்பவத்தின் விளக்கத்தை எடுத்துரைத்த பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: சுராக்கா திரும்பிச் செல்ல முற்பட்டபோது அல்லாஹ் உடனடியாக சுராக்காவின் எதிர்காலத்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மறைவான செய்தியை வெளிப்படுத்தி விட்டான். மேலும் அவற்றிற்கேற்ப அன்னார் (ஸல்) அவர்கள் அதனை அவரிடம் கூறினார்கள். மேலும் சுராக்காவே! உமது கைகளில் கிஸ்ரா பேரரசனின் தங்கக் காப்புகள் அணிவிக்கப்படும்போது உமது நிலை என்னவாக இருக்கும்? என்று கேட்டார்கள். ஈரானிய பேரரசனான கிஸ்ரா பின் ஹுர்முஸின் காப்புகளா? என்று சுராக்கா மிகவும் ஆச்சரியமடைந்து கேட்டார். அதற்கு ஆம்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு 16, 17 ஆண்டுகளுக்குப் பிறகு சொல்லுக்கு சொல் முழுமையாக அப்படியே நிறைவேறியது. சுராக்கா முஸ்லிமாகி மதீனாவிற்கு வந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முதல் கலீஃபா ஆனார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனார்கள்.

அதிகரித்து வந்த இஸ்லாத்தின் கண்ணியத்தைக் கண்டு ஈரானியர்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த தொடங்கி விட்டனர். இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு பகரமாக இஸ்லாத்திற்கு எதிரில் நின்றதால் சுயமே நசுக்கப்பட்டு விட்டார்கள். கிஸ்ரா பேரரசனின் தலைநகரத்தில் இஸ்லாமிய படைகளின் குதிரைகள் முழுமையாக நிறைந்திருந்தன. ஈரானிய கருவூலங்கள் முஸ்லிம்களின் கரங்களுக்கு வந்து விட்டன. இஸ்லாமிய படைகளின் கட்டுப்பாட்டில் வந்த ஈரானிய அரசாங்கத்தின் செல்வங்களில் ஈரானிய வழக்கத்திற்கேற்ப கிஸ்ரா பேரரசர் கைகளில் அணிந்து வந்த அந்த காப்பும் இருந்தது. சுராக்கா அவர்கள் முஸ்லிமான பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் நேரத்தில் நிகழ்ந்த அந்த சம்பவத்தை மிகவும் பெருமிதத்துடன் முஸ்லிம்களுக்கு எடுத்துரைத்து வந்தார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுராக்காவை நோக்கி, சுராக்காவே! உமது கைகளில் கிஸ்ரா பேரரசரின் காப்பு அணிவிக்கப்படும்போது உமது நிலை என்னவாக இருக்கும்? என்று கூறியிருந்ததை முஸ்லிம்கள் ஏற்கனவே நன்கு அறிந்திருந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் போர் செல்வங்கள் வைக்கப்பட்டன. அவற்றில் அன்னார் கிஸ்ராவின் காப்புகளையும் கண்டார்கள். எனவே அனைத்து வரைபடமும் அன்னார் (ரலி) அவர்களின் கண்களுக்கு முன்னால் வந்து விட்டது. இறைவனின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சொந்த நகரத்தை விட்டு விட்டு பலவீனமான, இயலாமை நேரத்தில் மதீனாவிற்கு செல்ல நேரிட்டது. அதே நேரத்தில் சுராக்கா மற்றும் ஏனைய நபர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து அன்னாரை கொன்று விட வேண்டும் அல்லது எப்படியாவது மக்காவாசிகளிடம் அன்னாரை கொண்டு சேர்த்து விட வேண்டும் என்று குதிரைகளை ஓட்டிக் கொண்டு வந்தனர். நாம் அவ்வாறு செய்தால் 100 ஒட்டகங்களுக்கு எஜமானராகி விடலாம் என்று எண்ணியிருந்தனர். அந்த நேரத்தில் சுராக்காவே! கிஸ்ரா பேரரசரின் காப்பு உமது கைகளுக்கு வந்து விடும்போது உமது நிலை என்னவாக இருக்கும்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுராக்காவிடம் கூறியிருந்தார்கள்.

அது எத்துனை மகத்தான முன்னறிவிப்பாக இருந்தது! எவ்வளவு தெளிவான மறைவான செய்தியாக இருந்தது! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிஸ்ரா பேரரசனின் காப்புகளை கண் முன்னால் இருப்பதைக் கண்டபோது இறைவனின் வல்லமை அன்னாரது கண்களுக்கு முன்னால் மீண்டும் வந்து விட்டது. சுராக்காவை அழையுங்கள் என்று அன்னார் கூறினார்கள். சுராக்கா அழைக்கப்பட்டார். அப்போது கிஸ்ரா பேரரசனின் காப்புகளை அவர் தனது கரங்களில் அணிந்து கொள்ளட்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு கட்டளையிட்டார்கள். அப்போது இறைவனின் தூதரின் கலீஃபா அவர்களே! தங்கம் அணிவது முஸ்லிம்களுக்கு தடுக்கப்பட்டுள்ளதே! என்று சுராக்கா கூறினார். அதற்கு ஆம்! தடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இல்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உங்களது கையில் தங்கக் காப்பு இருப்பதைப் போன்று காட்டியிருந்தான். எனவே ஒன்று, நீங்கள் இதனை அணிந்து கொள்ளுங்கள். அல்லது நான் உங்களுக்கு தண்டனை அளிப்பேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஷரீஅத்தின் விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு சுராக்கா அவர்கள் ஆட்சேபனை செய்தார்கள். ஏனென்றால் அவர் ஏற்கனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு முழுமை பெறுவதை சுயமே தனது கண்களால் பார்ப்பதற்கு ஆசை கொண்டிருந்தார். சுராக்கா அந்த காப்புகளை தனது கைகளில் அணிந்து கொண்டார். அந்த மகத்துவமிக்க முன்னறிவிப்பு முழுமையடைந்ததை முஸ்லிம்கள் தமது கண்களால் கண்டு கொண்டனர்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 224 – 226)

அடுத்து, குறிப்பு வருகின்றது. அதாவது திரும்பிச் செல்கின்றபோது குரைஷிகள் தேடுவதற்காக அனுப்பியிருந்த ஒரு குழுவினரிடம் கூறப்பட்டது. அதாவது சுராக்காவிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குழுவைப் பற்றி கேட்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து சுராக்கா எதுவும் கூறவில்லை. மாறாக, பின்தொடர்ந்து சென்றவர்கள் திரும்பி வந்து விட்டதைப் போன்று உரையாடினார்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 249 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த ஹிஜ்ரத் பயணத்தில் உம்மே மஃபத் பற்றிய ஒரு சம்பவம் உள்ளது. அதன் குறிப்பு கிடைக்கின்றது. ஹிஜ்ரத்தின் இந்த பயணத்தின்போது ஒரு கூடாரத்தை கடந்தபோது வழிப்பாதை உணவை தேடுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த குழுவிற்கு அது தென்பட்டது. அது உம்மே மஃபதின் கூடாரமாக இருந்தது. உம்மே மஃபதின் பெயர் ஆதிகா பின்த் காலித் ஆக இருந்தது. ஹுஸாஆ கோத்திரத்தின்

கிளை கோத்திரமான பனூ கஅப் கோத்திரத்தைச் சார்ந்தவராக மஃபத் இருந்தார். அவர் ஹஸ்ரத் ஹுபைஷ் பின் காலிதின் சகோதரியாக இருந்தார். அன்னாருக்கு பெண் சஹாபியாக இருப்பதற்கும், அறிவிப்புகள் செய்வதற்கும் நற்பேறு கிடைத்தது. உம்மே மஃபதின் கணவரின் பெயர் அபூமஃபத் ஆகும். அன்னாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து சில ரிவாயத் செய்திருப்பதாக கூறப்படுகிறது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே மரணமடைந்து விட்டார். அபூமஃபதின் அசல் பெயர் தெரியவில்லை. உம்மே மஃபதின் கூடாரம் ஹுதைத் எனும் இடத்தில் அமைந்திருந்தது. ஹுதைத் என்பது மக்காவிற்கு அருகிலுள்ள ஓர் ஊரின் பெயராகும். அது ராபிக் என்ற இடத்திலிருந்து சில மைல் தொலைவில் தெற்கில் அமைந்துள்ளது. அங்கு மிகவும் பிரபலமான மனாத் எனும் சிலை அமைக்கப்பட்டிருந்தது. மதீனாவாசிகள் அதனை வணங்கி வந்தனர்.

(அர்ரவ்ஸுல் அன்ஃப் தொகுதி 2 பக்கம் 325 நஸப் உம்மே மஃபத் – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உம்மே மஃபத் ஒரு வீரமான மற்றும் வலிமையான பெண்மணியாக இருந்தார்கள். அன்னார் தனது கூடாரத்தின் வளாகத்தில் அமர்ந்திருந்தார். அந்த வழியாக கடந்து செல்லக் கூடியவர்களுக்கு உணவளித்தும், பருகுவதற்கு தண்ணீர் கொடுத்தும் வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் தோழர்கள் அவரிடம் இறைச்சி மற்றும் பேரீத்தம் பழங்கள் தொடர்பாக விசாரித்தார்கள். அந்தப் பொருட்களை வாங்குவதற்காக அவர்கள் கேட்டார்கள். ஆனால் அவற்றில் எந்தப் பொருளும் அவரிடம் இருக்கவில்லை. அந்த நேரத்தில் உம்மே மஃபதின் சமுதாயம் மிகவும் வறியவர்களாகவும், வறட்சியால் பாதிக்கப்பட்டும் இருந்தது. எங்களிடத்தில் அவையெல்லாம் இருந்தால் நாங்கள் உங்களிடமிருந்து அதனை விலக்கி வைக்க மாட்டோம் என்று உம்மே மஃபத் கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கூடாரத்தின் ஒரு மூலையில் ஆடு ஒன்று தென்பட்டது. அப்போது உம்மே மஃபதே! இந்த ஆடு எப்படி வந்தது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, பலவீனத்தின் காரணமாக மந்தையிலிருந்து இந்த ஆடு பின்தங்கி விட்டது என்று கூறினார். அதாவது மந்தையுடன் வெளியில் மேய்வதற்கு இந்த ஆட்டுக்கு போதுமான ஆற்றல் இல்லை என்பது அதன் பொருளாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனிடம் பால் உள்ளதா? என்று கேட்டார்கள். அது அதிகமாக பலவீனமாக உள்ளது. அதனிடம் பால் இருப்பதற்கு சாத்தியமே இல்லை என்று அவர் கூறினார். நான் அதனிடமிருந்து பாலை கரப்பதற்கு நீர் எனக்கு அனுமதி வழங்குகின்றீரா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். உங்களுக்கு இந்த ஆட்டில் பால் தென்படுகின்றதென்றால் பின்னர் நிச்சயமாக கரந்து கொள்ளுங்கள். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று அவர் கூறினார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஆட்டை கொண்டு வரும்படி செய்தார்கள். அதன் மடியில் தனது கையை வைத்து கண்ணியமிக்க அல்லாஹ்வின் பெயரை நினைவு கூர்ந்தார்கள். மேலும் உம்மே மஃபதிற்காக அந்த ஆட்டின் மூலம் பரக்கத் கிடைப்பதற்கு துஆ செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் மிக எளிதாக ஆடு நின்று கொண்டது. மேலும் நிறைய பாலை கொடுத்தது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கூட்டத்திற்கு போதுமானதாக இருக்கும் அளவிலான ஒரு பாத்திரத்தை கேட்டார்கள். அதில் பாலை கரந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அந்த பாத்திரத்தின் மேல் பகுதி வரை நுரை வந்து விட்டது. பின்னர் அன்னார் உம்மே மஃபதை அழைத்தார்கள். அவரும் அந்த ஆட்டின் பாலை அருந்தினார். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு பருகக் கொடுத்தார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் அனைவரும் மனநிறைவு அடைந்தார்கள். எல்லோருக்கும் பிறகு கடைசியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பால் அருந்தினார்கள். சமுதாயத்திற்கு பருகச் செய்பவர் இறுதியில் பருகுவார் என்று அன்னார் கூறினார்கள். பின்னர் சிறிது இடைவெளிக்குப் பிறகு அன்னார் மீண்டும் ஒரு பாத்திரத்தில் பால் கரந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அது நிறைந்து விட்டது. மேலும் அதனை உம்மே மஃபதிடம் விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஆட்டை விலைக்கு வாங்கினார்கள். மேலும் பயணத்திற்கு புறப்பட்டு விட்டார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 244, 245 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், உயிரை அர்ப்பணிப்பதற்கு தயாராக இருந்த தோழரான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் இறை உதவி மற்றும் ஒத்தாசையுடன் வானவர்கள் படைசூழ பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கம் மக்காவாசிகள் இன்னும் தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கவில்லை.

அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தொடர்ந்து பின்தொடர்ந்து கொண்டிருந்தார்கள். எனவே குரைஷியர்கள் சார்பாக பின்தொடரக்கூடிய ஒரு குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடியவாறு உம்மே மஃபதின் கூடாரத்தையும் வந்தடைந்தது. அந்த மக்கள் தமது சவாரிகளிலிருந்து கீழே இறங்கியவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கேட்கத் தொடங்கினர். உம்மே மஃபத் அவர்கள் எல்லாவற்றையும் புரிந்திருந்தார்கள். மேலும் நான் ஒருபோதும் கேட்டிராத விஷயத்தை குறித்து நீங்கள் கேட்கின்றீர்கள். மேலும் நீங்கள் என்ன விரும்புகின்றீர்கள்? என்பதும் எனக்கு புரியவில்லை என்று கூறினார்கள். அவர்கள் தங்களது கேள்விகளில் சிறிது கடுமையை காட்டியபோது வீரமிக்க அந்த பெண்மணி கூறினார். நீங்கள் என்னை விட்டு விலகிச் செல்லவில்லையென்றால் பின்னர் நான் எனது கோத்திரத்தைச் சார்ந்தவர்களை குரல் கொடுத்து அழைத்து விடுவேன் என்றும் கூறினார்கள். அந்த மக்கள் அந்தப் பெண்மணியின் அந்தஸ்தை அறிந்திருந்தார்கள். எனவே திரும்பிச் செல்வதே தமக்கு பாதுகாப்பு என்பதை புரிந்து கொண்டனர்.

(முஹம்மது ரஸூலுல்லாஹ்… தொகுதி 3 பக்கம் 67 – மிஸ்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தற்போது வழிப்பாதையில் இருந்தபோது அன்னாரை ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் சந்தித்தார்கள். அன்னார் முஸ்லிம்களின் ஒரு குழுவினருடன் சிரியாவில் வணிகம் செய்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வெள்ளை நிற உடையை அணிவித்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப், ஹதீஸ் எண் 3906)

இந்த சந்திப்பை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது வழியில் சுபைர் பின் அல் அவாம் (ரலி) அவர்களுடன் சந்திப்பு நடந்தது. அன்னார் சிரியாவிலிருந்து பயணம் செய்து முஸ்லிம்களின் ஒரு சிறிய குழுவினருடன் மக்காவிற்கு திரும்பி சென்று கொண்டிருந்தார்கள். சுபைர் அவர்கள் ஒரு ஜோடி வெள்ளை ஆடையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் அன்பளிப்பாக வழங்கினார்கள். மேலும் நானும் மக்காவிற்கு சென்று விட்டு மிக விரைவில் தங்களை மதீனாவில் வந்து சந்திப்பேன் என்று கூறினார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 242)

அடுத்து புகாரியின் ஓர் அறிவிப்பு உள்ளது. சில முறை இவ்வாறும் நிகழ்ந்தது. அதாவது வழியில் செல்லும்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அன்னாரின் பெரும்பாலான வணிக பயணத்தின் காரணமாக அவர்களை அதே இடத்தில் பார்த்திருந்தனர். எனவே ஏனைய அந்த வணிகக் குழுவினர் தங்களுடன் இருப்பது இவர் யார்? என்று கேட்பார்கள். அதற்கு அன்னார் (ரலி) அவர்கள், இவர் எனக்கு வழிகாட்டக் கூடியவர் ஆவார் என்று கூறி விடுவார்கள். هٰذَا الرَّجُلُ يَهْدِيْنِي السَّبِيْلَ எனக்கு வழிப்பாதையின் வழிகாட்டக் கூடியவர் இவர் ஆவார். இவர் வழிகாட்டி ஆவார் என்று மக்கள் புரிந்து கொள்வர். (ஆனால்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதன் கருத்து நேர்வழி சம்பந்தப்பட்டதாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப் வல் அன்ஸார்ல ஹதீஸ் எண் 3911)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், வணிகம் மற்றும் தொழில் காரணமாக அந்த வழியாக அடிக்கடி சென்று வந்தார்கள். எனவே பெரும்பாலான மக்கள் அன்னாரை அறிந்திருந்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அறிந்திருக்கவில்லை. எனவே உமக்கு முன்னால் செல்லும் இவர் யார்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் மக்கள் கேட்பார்கள். அதற்கு هٰذَا يَهْدِيْنِي السَّبِيْلَ என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுவார்கள். அதாவது இவர் எனது ஹாதி அதாவது வழிகாட்டி ஆவார். அப்போது ஒருவேளை அவர் யாரோ ஒரு Guide என்று மக்கள் புரிந்து கொண்டனர். அதாவது வழிப்பாதையை காட்டுவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரை தம்முடன் அழைத்து வந்துள்ளார் என்று மக்கள்

கருதி வந்தனர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிய கருத்து வேறொன்றாக இருந்தது.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 242)

உரிய இடத்தை அடைவது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. 8 நாட்கள் பயணம் செய்தவாறு இறை உதவிகளுடன் இறுதியில் திங்கட்கிழமையன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் பாதையான குபா எனும் இடத்தை வந்தடைந்து விட்டார்கள். திங்கட்கிழமையன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். திங்கட்கிழமையன்று மக்காவிலிருந்து புறப்பட்டார்கள். திங்கட்கிழமையன்று மதீனா வந்தடைந்தார்கள். மேலும் திங்கட்கிழமையன்று அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள் என்று ஹதீஸில் வந்துள்ளது.

((சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 253 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 243)

குபா என்பது ஒரு கிணற்றின் பெயராகும். அதன் தொடர்பை வைத்து அந்த ஊரின் பெயரும் குபா என்று பிரபலமாகி விட்டது. அங்கு அன்ஸார் சகோதரர்களின் கோத்திரமான பனூ அம்ர் பின் அவ்ஃபைச் சார்ந்த மக்கள் வசித்து வந்தனர். அந்த ஊர் மதீனாவிலிருந்து 2 மைல் தொலைவில் இருந்தது.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 377 – 2014 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது &

சிலரின் பார்வையில் மதீனாவிலிருந்து குபா என்ற இடம் 3 மைல் தொலைவில் இருந்தது. அதனை ஆலியா என்றும் கூறுவார்கள்.

(சீரத் ஃபார்ஹின்ங் பக்கம் 230)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து புறப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை மதீனாவில் முஸ்லிம்கள் அறிந்திருந்தனர். எனவே அவர்கள் ஒவ்வொரு காலையிலும் ஹர்ரா என்ற இடம் வரை சென்று வந்தனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக காத்திருந்தனர். மதீனா இரண்டு குன்றுகளுக்கு மத்தியில் உள்ளது. கருங்கற்களைக் கொண்ட பூமியை ஹர்ரா என்று கூறுவார்கள். மதீனாவின் கிழக்கு பக்கத்தில் ஹர்ரா வாகிம் என்ற இடம் உள்ளது. அதனை ஹர்ரா பனூ குரைழா என்றும் கூறுவார்கள். இரண்டாவதாக, حَرَّةُ الْوَبُرَة என்ற இடம் உள்ளது. அது மதீனாவின் தெற்குப் பக்கத்தில் 3 மைல் தொலைவில் அமைந்துள்ளது. எந்த அளவுக்கென்றால் மதிய வேளையின் வெப்பமானது அவர்களை திருப்பி அனுப்பி விடும். பின்னர் காலையில் சென்று காத்திருப்பார்கள். மதிய வேளையில் திரும்பி வந்து விடுவார்கள்.

ஒரு நாள் மதீனாவாசிகள் நீண்ட நேரம் வரை காத்திருந்து விட்டு பிறகு திரும்பி விட்டார்கள். பின்னர் அவர்கள் தங்களது இல்லங்களை அடைந்தபோது ஒரு யூத நபர் தமது கோட்டைகளில் ஒரு கோட்டையின் மீது ஏதோ ஒரு பணிக்காக ஏறினார். அப்போது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் தோழர்களை பார்த்து விட்டார். அவர்கள் வெள்ளை நிற ஆடைகளை அணிந்திருந்தார்கள். யூதரால் தன்னை கட்டுப்படுத்த முடியவில்லை. அரேபிய மக்களே! இதோ நீங்கள் யாருக்காக காத்துக் கொண்டிருந்தீர்களோ அவர், உங்களின் தலைவர் வந்து விட்டார் என்று அவர் உரத்த குரலில் கூறினார்.

அப்போது முஸ்லிம்கள் ஆயுதங்களை ஏந்திக் கொண்டனர். ஹர்ரா மைதானத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்று சந்தித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுடன் வலப் பக்கமாக திரும்பினார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ஸல்) அவர்கள் பனூ அம்ர் பின் அவ்ஃபின் வீதியில் அவர்களுடன் வந்து இறங்கினார்கள். மேலும் அந்த நாள் திங்கட்கிழமையாக இருந்தது. மேலும் ரபீவுல் அவ்வல் மாதமாக இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு முன்னால் நின்று கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். அன்ஸார் சகோதரர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கண்டிராத மக்கள் வந்தனர். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சலாம் கூறத் தொடங்கினர். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சூரிய ஒளி பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பின்னால் சென்றார்கள். மேலும் தமது போர்வையால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிழலிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மக்கள் அடையாளங்கண்டு கொண்டனர். மேலும் எந்த பள்ளிவாசல் இறையச்சத்தின் அடிப்படையில் அமைந்ததோ அதற்கு அடித்தளம் நாட்டினார்கள். மேலும் அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுதார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அன்ஸார் ஹதீஸ் எண் 3906 & சஹீஹுல் புகாரி கிதாபுஸ் ஸலாத் ஹதீஸ் எண் 428 & சீரத் ஃபார்ஹின்ங் பக்கம் 101, 102 )

புகாரியின் இந்த அறிவிப்புக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 10 இரவுகளுக்கும் அதிகமாக குபாவில் தங்கி இருந்தார்கள்.

ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ அம்ர் பின் அவ்ஃப் அதாவது குபாவில் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நான்கு நாட்கள் தங்கியிருந்தார்கள். ஜுமுஆ நாளன்று மதீனாவிற்கு புறப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு 22 இரவுகள் தங்கியிருந்ததாக மற்றோர் அறிவிப்பில் வருகின்றது.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 75 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குபாவிற்கு வருகை தந்ததைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது சுராக்காவை வழியனுப்பிய பிறகு சில இடங்களைக் கடந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவை வந்தடைந்தார்கள். மதீனாவாசிகள் மிகவும் ஏக்கத்துடன் அன்னாருக்காக காத்திருந்தார்கள். மக்காவிற்காக உதயமான அந்த சூரியன் மதீனத்து மக்கள் மீது உதயமாகிய இந்த விஷயத்தை விட நற்பேறு வேறு என்னவாக இருக்க முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மறைந்து விட்டார்கள் (வெறியேறி விட்டார்கள்) என்ற செய்தி அவர்களுக்கு கிடைத்தபோது மதீனாவாசிகள் அந்த நாள் முதலே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக காத்திருந்தார்கள். அவர்களின் குழு ஒன்று தினமும் மதீனாவிலிருந்து பல மைல் தூரம் வரை வெளியில் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடி வந்தது. மாலையில் நிராசையடைந்து திரும்பி வந்தனர்.

அன்னார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு அருகில் வந்தடைந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு அருகிலுள்ள ஓர் ஊரான குபாவில் தங்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். ஒரு யூதர் அன்னார் (ஸல்) அவர்களின் ஒட்டகங்கள் வருவதைக் கண்டார். இந்த குழுவினர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் குழுவினர் ஆவர் என்பதை அவர் புரிந்து கொண்டார். அவர் ஒரு குன்றின் மீது ஏறினார். மேலும் உரத்த குரலில், கைலாவின் சந்ததிகளே! (கைலா என்பது மதீனாவாசிகளின் ஒரு பள்ளத்தாக்கு ஆகும்). எனவே கைலாவின் சந்திகளின் என்ற பெயரால் அங்கு வசிப்பவர்கள் அழைக்கப்பட்டு வந்தார்கள். நீங்கள் எந்த நபருக்காக காத்திருந்தீர்களோ அவர் வந்து விட்டார் என்று அவர் கூறினார். இந்த குரலைக் கேட்டதுமே மதீனாவின் ஒவ்வொரு நபரும் குபாவை நோக்கி விரைந்தோடினார். இறைவனின் நபி நம்மிடம் தங்குவதற்காக வந்துள்ளார் என்ற எண்ணத்தால் குபாவாசிகள் மகிழ்ச்சியால் மிகவும் நிறைந்திருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பை உணர்த்தும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. மதீனாவின் பெரும்பாலான மக்கள் அன்னாரின் முகத்தை அறிந்திருக்கவில்லை. குபாவிற்கு வெளியே ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தபோது மக்கள் மதீனாவிலிருந்து அன்னாரை நோக்கி ஓடோடி வந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் எளிமையாக அமர்ந்திருந்தார்கள். வயதில் குறைவாக இருந்தபோதும், தாடியில் வெள்ளை முடிகள் வந்திருந்ததாலும், அதேபோன்று அன்னார் (ரலி) அவர்களின் ஆடை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆடையை விட சற்று சிறந்ததாகவும் இருந்ததால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து அன்னார் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஆவார்கள் என்று அந்த மக்களில் அறியாதவர்கள் புரிந்து கொண்டனர். மேலும் மிகவும் மரியாதையுடன் அன்னாரை நோக்கி முகத்தை திருப்பி அமர்ந்து கொண்டனர். இந்த விஷயத்தை பார்த்ததும் மக்களுக்கு தவறான புரிதல் ஏற்பட்டுள்ளது என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். எனவே உடனடியாக போர்வையை விரித்து சூரியனுக்கு முன்னால் நின்று கொண்டார்கள். மேலும்

## நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்கள் மீது வெயில் படுகிறது. எனவே நான் தங்கள் மீது நிழலிடுகின்றேன் என்று கூறினார்கள். இவ்வாறு நுட்பமான வழிமுறையால் அன்னார் (ரலி) அவர்கள் மக்களின் தவறுகளை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டி விட்டார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 226, 227)

இந்த சம்பவத்தின் விளக்கத்தை எடுத்துரைத்தவாறு புகாரியின் ஒரு சான்றை பதிந்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: புகாரியில் பரா பின் ஆஸிபின் அறிவிப்பு வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்த நேரத்தில் அன்ஸார் சகோதரர்களுக்கு எப்படிப்பட்ட மகிழ்ச்சி ஏற்பட்டிருந்ததென்றால் நான் ஒருபோதும் அவர்களை அதற்கு முன் வேறு எந்த சந்தர்ப்பத்திலும் அவ்வளவு மகிழ்ச்சியான நிலையில் கண்டதில்லை.

திர்மிதி மற்றும் இப்னு மாஜா அனஸ் பின் மாலிக் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தபோது மதீனா எங்களுக்கு ஒளிமயமாக ஆகி விட்டதாக நாங்கள் உணர்ந்தோம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது அந்த நாளை விட அதிக இருளான நாளை மதீனா நகரம் ஒருபோதும் கண்டதில்லை.

வரவேற்பாளர்களின் சந்திப்பிற்குப் பிறகு ஏதோ ஒரு எண்ணத்தின் காரணமாக நகரத்திற்குள் அன்னார் (ஸல்) நுழையவில்லை. அதைப்பற்றி வரலாற்றிலும் குறிப்பு இடம் பெறவில்லை. மாறாக, வலப் பக்கமாக விலகி மதீனாவின் உட்புறமான இடத்தில் அந்த இடம் அசல் நகரத்திலிருந்து இரண்டு, இரண்டரை மைல் தொலைவில் இருந்தது. அந்த இடத்தின் பெயர் குபா ஆகும். அங்கு அன்னார் (ஸல்) அவர்கள் சென்று விட்டார்கள். அந்த இடத்தில் அன்ஸாரின் சில குடும்பத்தினர் வசித்து வந்தனர். அதில் பெரும்பாலும் தனித்தன்மை வாய்ந்த அம்ர் பின் அவ்ஃப் கோத்திரம் திகழ்ந்தது. அக்காலத்தில் அந்த கோத்திரத்தின் தலைவராக குல்ஸூம் பின் அல்ஹிதம் இருந்தார்கள். குபாபின் அன்ஸார் சகோதரர்கள் அன்னார் (ஸல்) அவர்களை மிகவும் இனிமையான உள்ளத்துடன் வரவேற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குல்ஸூம் பின் அல்ஹிதம் அவர்களின் வீட்டில் தங்கினார்கள். அன்னார் (ஸல்) அவர்களுக்கு முன்பாக மதீனா வந்தடைந்திருந்த முஹாஜிர் சகோதரர்கள் அந்த நேரத்தில் பெரும்பாலும் குபாவில் குல்ஸூம் பின் அல்ஹிதம் மற்றும் ஏனைய கண்ணியத்திற்குரிய அன்ஸார் சகோதரர்களின் வீட்டிலேயே தங்கி இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் முதல் நாளில் குபாவில் தங்குவதற்கு ஒருவேளை இதே காரணத்தினால் விரும்பி இருக்கலாம். ஒரு நொடிப்பொழுதில் முழு மதீனாவிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் செய்தி பரவியது. அனைத்து முஸ்லிம்களும் மகிழ்ச்சியினால் நிம்மதியழந்து கூட்டம் கூட்டமாக அன்னார் (ஸல்) அவர்களின் தங்குமிடத்தில் ஒன்றுகூட தொடங்கி விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 264, 265)

மஸ்ஜிது குபாவின் கட்டுமானம் பற்றி இவ்வாறு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குபாவில் தங்கியிருந்தபோது ஒரு பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள். அது மஸ்ஜிது குபா என்று அழைக்கப்படுகிறது.

சஹீஹ் புகாரியில் இவ்வாறு வருகிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்தின் வீதியில் 10 இரவுகளுக்கும் கூடுதலாக தங்கியிருந்தார்கள். மேலும் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும் அதன் அடித்தளம் இறையச்சத்தால் அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தொழுதார்கள்.

(புகாரி, கிதாபுல் மனாகிப் வல்அன்ஸார்.... ஹதீஸ் எண் 3906)

அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்திற்கு பள்ளிவாசலுக்காக அடிக்கல் வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு அடிக்கல் நாட்டியபோது முதன் முதலில் அன்னார் கிப்லாவை நோக்கி ஒரு கல்லை வைத்தார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு கல்லை எடுத்து வைத்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு கல்லை எடுத்து வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய கல்லுடன் வைத்து விட்டார்கள். பின்னர் அனைத்து மக்களும் கட்டுமானப் பணியில் மும்முரமாகி விட்டார்கள். மஸ்ஜிது குபா கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கல்லை சுமந்து வந்தார்கள். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வயிற்றுடன் சேர்த்து வைத்திருந்தார்கள். அது மிக எடையுள்ள கல்லாக இருந்தது. பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் அந்த கல்லை வைத்து விட்டார்கள். ஒரு நபர் வந்தார். அந்த கல்லை தூக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் அவரால் அதை தூக்க முடியவில்லை. அப்போது அதனை விட்டு விடுங்கள். வேறொரு கல்லை எடுத்து வாருங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் அவருக்கு கட்டளையிட்டார்கள்.

(அர்ரவ்ஸுல் அன்ஃப் தொகுதி 2 பக்கம் 332 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மஸ்ஜிது குபா தொடர்பாக வருகிறது. தக்வாவை அடித்தளமாகக் கொண்டு அமைக்கப்பட்ட பள்ளி இதே பள்ளி ஆகும். ஆனால் சில அறிவிப்புகளில் மஸ்ஜிது நபவியை தக்வாவின் அடித்தளத்தால் அமைக்கப்பட்ட பள்ளி என்று குறிப்பிடப்படுகின்றது.

சீரத் ஹல்பியாவில் இந்த குறிப்பு வருகின்றது. அந்த இரண்டு கூற்றுகளிலும் எந்த முரண்பாடும் இல்லை. ஏனென்றால் அந்த இரண்டு பள்ளிவாசல்களிலும் ஒவ்வொன்றின் அடித்தளமும் தக்வாவை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் கூற்றிலிருந்தும் இந்த விஷயம் உறுதி ஆகின்றது.

அறிவிப்பிற்கேற்ப அன்னாரின் கருத்து இவ்வாறாக இருந்தது. அதாவது மதீனாவின் அனைத்து பள்ளிவாசல்களும் அதில் குபாவின் பள்ளிவாசலும் அடங்கும். அதன் அடித்தளம் தக்வாவின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் எதனைக் குறித்து இவ்வசனம் இறங்கியதோ அந்தப் பள்ளிவாசல் குபா பள்ளிவாசலே ஆகும்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 75 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

10 அல்லது 15 நாட்கள் தங்கியது பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குபாவிலிருந்து மதீனாவிற்கு புறப்பட்டுச் சென்றார்கள். வழியில் பனூ சாலிம் பின் அவ்ஃப் கோத்திரத்தின் ஊரை அடைந்தபோது ஜுமுஆ நாள் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுடன் ரானோனா பள்ளிவாசலில் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றினார்கள். அவர்களின் எண்ணிக்கை 100 ஆக இருந்தது. ரானோனா பள்ளத்தாக்கு மதீனாவின் தெற்கில் அமைந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பள்ளிவாசலில் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றியதிலிருந்து அந்த பள்ளிவாசல் மஸ்ஜிதுல் ஜுமுஆ என்று அழைக்கப்படத் தொடங்கியது. மதீனாவில் அன்னார் (ஸல்) அவர்கள் தொழுத முதல் ஜுமுஆ ஆக அது இருந்தது.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 81 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா தொகுதி 2 பக்கம் 349 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அந்த பள்ளிவாசல் பிற்காலத்திலும் அங்கு கட்டப்பட்டிருக்கக் கூடும். அந்த இடத்தில் ஜுமுஆ தொழுததன் காரணமாக அதற்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஒட்டகத்தின் மீது சவாரி செய்து மதீனாவை நோக்கி புறப்பட்டார்கள். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை பின்னால் அமர்த்தி இருந்தார்கள்.

(ஷரஹ் ஸர்கானி அலல் மவாஹிப் தொகுதி 2 பக்கம் 157 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பரிசின் பேராசையால் ஏராளமான நபர்கள் அன்னார் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து செல்வதற்கு முயற்சி செய்தனர்.

வரலாற்று புத்தகத்தில் ஒரு சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புரைதா பின் ஹுஸைப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பிடித்து வர எண்ணம் கொள்பவர்களுக்கு 100


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)



**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

ஒட்டகங்களுக்கான பரிசு வழங்கப்படும் என குரைஷிகள் நிர்ணயம் செய்தனர். அதாவது அன்னார் (ஸல்) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துக் கொண்டு வர வேண்டும். எனவே எனக்கும் அந்த பேராசை ஏற்பட்டது. எனவே நான் பனூ ஸஹம் கோத்திரத்தின் 70 நபர்களுடன் சவாரி செய்து புறப்பட்டேன். மேலும் அன்னார் (ஸல்) அவர்களை சந்தித்தேன். நீர் யார்? என்று அன்னார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் புரைரா என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி, அபூபக்ரே! நமது விவகாரம் தணிந்து சரியாகி விட்டது என்று கூறினார்கள்.

பின்னர் நீங்கள் எந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்? என்று அன்னார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் அஸ்லம் கோத்திரத்தைச் சார்ந்தவன் என்று கூறினேன். அப்போது பாதுகாப்பாக இருங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் யாருடைய சந்ததிகள்? என்று கேட்டார்கள். நான் பனூ ஸஹமின் சந்ததி ஆவேன் என்று கூறினேன். அப்போது அபூபக்ரே! உமது ஸஹம் அதாவது உமது குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்கின்றார் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் புரைரா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தாங்கள் யார்? என்று கேட்டார். அதற்கு நான் முஹம்மது பின் அப்தில்லாஹ் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவனது அடியாரும், திருத்தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன் என்று புரைரா கூறினார். பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்.

அவருடனிருந்து அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டனர். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று புரைரா கூறினார். பனூ ஸஹம் மனமகிழ்ச்சியுடன் எந்த நிர்பந்தமுமின்றி இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். காலை விடிந்தபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மதீனாவில் தாங்கள் (ஸல்) ஒரு கொடியுடன் நுழைய வேண்டும் என்று புரைரா கூறினார். பின்னர் அவர் தமது தலைப்பாகையை அவிழ்த்து அதனை தனது வாளின் மீது கட்டி விட்டார். மேலும் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்பாக செல்லத் தொடங்கினார். எந்த அளவுக்கென்றால் முஸ்லிம்கள் மதீனாவில் நுழைந்தனர்.

(ஷரஹ் ஸர்கானி அலல் மவாஹிப் லித்துன்யா தொகுதி 2 பக்கம் 148 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 2 பக்கம் 71 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மதீனா வருகை தொடர்பாக ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் அறிவிப்பு இவ்வாறு வருகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்தார்கள். மதீனாவின் மேல் பகுதியில் பனூ அம்ர் பின் அவ்ஃப் என்ற அழைக்கப்பட்ட கோத்திரத்தில் இறங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 14 நாட்கள் அங்கு தங்கியிருந்தார்கள். பின்னர் பனூ நஜ்ஜார் கோத்திரத்தை அழைத்தார்கள். அவர்கள் வாள்களை ஏந்திக் கொண்டு வர வேண்டும் என்று கூறினார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இப்போதும் தனது சவாரியில் அமர்ந்திருப்பதைப் போன்று காண்கின்றேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தார்கள். பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் மக்கள் அன்னார் (ஸல்) அவர்களை சுற்றி இருந்தார்கள். இறுதியில் அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களின் வளாகத்தில் முகாமிட்டார்கள். இந்த சம்பவம் எனக்கு அப்படியே நினைவில் உள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸலாத்.... ஹதீஸ் எண் 428)

இதன் சூழலை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: குபா எனும் இடத்தில் 10 நாட்களுக்கும் கூடுதலாக தங்கிய பிறகு ஜுமுஆ நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் உட்புற பகுதியை நோக்கி புறப்பட்டார்கள். அன்ஸார் மற்றும் முஹாஜிர் சஹாபிகளின் பெரும் கூட்டம் அன்னார் (ஸல்) அவர்களுடன் இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் ஓர் ஒட்டகத்தின் மீது அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் இருந்தார்கள். இந்தப் பயணம் மெது மெதுவாக நகரத்தை நோக்கி முன்னேறிச் செல்லத் தொடங்கியது. வழியிலேயே ஜுமுஆ தொழுகைக்கான நேரம் வந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ சாலிம் பின் அவ்ஃப் கோத்திரத்தின் வீதிகளில் தங்கியிருந்து சஹாபிகளுக்கு மத்தியில் குத்பா வழங்கினார்கள். மேலும் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றினார்கள்.

வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எழுதுகின்றனர்: ஒருவகையில் அதற்கு முன்பே ஜுமுஆ தொழுகை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்னார் (ஸல்) அவர்கள் சுயமே நிறைவேற்றிய முதல் ஜுமுஆவாக அது இருந்தது. அதன் பிறகிலிருந்து ஜுமுஆ தொழுகைக்கான வழிமுறை முறையாக செயல்படுத்தப்பட்டது. (அந்த பள்ளிவாசல் பின்நாட்களில் கட்டப்பட்டது என்பதும் இதிலிருந்து வெளிப்படுகின்றது).

ஜுமுஆ தொழுகை முடிந்த பிறகு அன்னார் (ஸல்) அவர்களின் பயணக் குழு மீண்டும் மெது மெதுவாக முன்னேறத் தொடங்கியது. வழிப்பாதையில் அன்னார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் வீடுகளை கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது எமது வீடாகும். இதோ எங்களது செல்வமும், உயிரும் தயாராக உள்ளது. எங்களிடம் பாதுகாப்பிற்கான ஏற்பாடும் உள்ளது. தாங்கள் (ஸல்) எங்களிடத்தில் வருகை தாருங்கள் என்று அந்த முஸ்லிம்கள் அன்பின் உணர்வுடன் போட்டி போட்டுக் கொண்டு கூறிக் கொண்டிருந்தனர். அன்னார் (ஸல்) அவர்கள் அந்த மக்களின் நன்மைக்காக துஆ செய்தார்கள். மேலும் மெது மெதுவாக நகரத்தை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருந்தார்கள். முஸ்லிம் பெண்களும், இளைஞிகளும் மகிழ்ச்சியின் உணர்வால் தமது வீடுகளின் தளங்களில் நின்று கொண்டு பாட்டு பாடத் தொடங்கினர்.

طَلَعَ الْبَدْرُ عَلَيْنَا     مِنْ ثَنِيَّاتِ الْوَدَاعِ
وَجَبَ الشُّكْرُ عَلَيْنَا     مَا دَعٰى لِلّٰهِ دَاعِ

அதாவது இன்று வதா மலையின் பள்ளத்தாக்கிலிருந்து 14 ஆம் நிலவு உதித்துள்ளது. எனவே தற்போது இறைவனுக்கு நன்றி செலுத்துவது எங்கள் மீது கடமையாகி விட்டது. முஸ்லிம்களின் பிள்ளைகள் மதீனாவின் வீதிகளிலும், மூலைகளிலும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் வந்து விட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வந்து விட்டார்கள் என்ற பாடலை பாடிக் கொண்டு சுற்றித் திரிந்து வந்தார்கள். மதீனாவின் அபிஸீனிய அடிமைகளும் அன்னார் (ஸல்) அவர்களின் வருகையின் மகிழ்ச்சியால் வாள் ஏந்திக் கொண்டு சுற்றித் திரிந்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நகரத்திற்குள் நுழைந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் தம்மிடமே தங்க வேண்டும் என்று ஒவ்வொரு நபரும் ஆசை கொண்டார். மேலும் ஒவ்வொரு நபரும் போட்டி போட்டுக் கொண்டு தொண்டுகளை முன் வைத்தார். அன்னார் (ஸல்) அவர்கள் அனைவருடனும் அன்புடன் உரையாடினார்கள். மேலும் முன்னேறிக் கொண்டே சென்றார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னாரின் ஒட்டகம் பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் வீதியை சென்றடைந்தது. அந்த இடத்தில் பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் மக்கள் ஆயுதங்களால் அலங்கரிக்கப்பட்ட வரிசைகளை நிற்கச் செய்து அன்னார் (ஸல்) அவர்களை வரவேற்பதற்காக எழுந்து நின்றார்கள். கோத்திரத்தின் பெண் பிள்ளைகள் முரசு கொட்டி, இந்த கவிதை வரிகளை பாடிக் கொண்டிருந்தார்கள்.

نَحْنُ جَوَارٍ مِنْ بَنِى نَجَّارِ     يَاحَبَّذَا مُحَمَّدًا مِنْ جَارِ

நாங்கள் பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் பெண் பிள்ளைகள் ஆவோம். முஹம்மது (ஸல்) அவர்கள் தங்குவதற்காக எங்களது வீதிகளில் வருகை தந்துள்ளது எங்களது மாபெரும் நற்பேறு ஆகும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 266, 267)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய குடும்பத்தினரை மதீனாவிற்கு அழைத்த சம்பவத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

சில காலத்திற்குப் பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் தம்மால் விடுதலை செய்யப்பட்ட அடிமையை அதாவது ஹஸ்ரத் ஸைது (ரலி)

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

அவர்களை மதீனாவிற்கு வந்த சில காலத்திற்குப் பிறகு மக்காவிற்கு அனுப்பி வைத்து அன்னார் (ஸல்) அவர்களின் குடும்பத்தினரை அழைத்து வரச் செய்தார்கள். மக்கா வாசிகள் திடீரென நிகழ்ந்த இந்த ஹிஜ்ரத் சம்பவத்தால் சிறிது பதற்றமடைந்திருந்தார்கள். எனவே சிறிது காலம் வரை அநீதிகளின் தொடர் தடைபட்டிருந்தது. இதே பதற்றத்தின் காரணமாக அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் குடும்பத்தினர் மக்காவை விட்டு செல்வதை எதிர்க்கவில்லை. அந்த மக்கள் பாதுகாப்பாக மதீனா வந்தடைந்து விட்டார்கள். அந்த காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாங்கியிருந்த நிலத்தில் முதன் முதலில் அங்கு அன்னார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டினார்கள். அதன் பிறகு தமக்காகவும், தமது தோழர்களுக்காகவும் வீடு கட்டினார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 230)

மதீனா ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுஹ் எனும் இடத்தில் ஹஸ்ரத் குபைப் பின் இஸாஃப் என்பவருடைய வீட்டில் தங்கினார்கள்.

சுஹ் என்ற இடம் மதீனாவிற்கு அருகில் அமைந்துள்ள ஓர் இடமாகும். அது மஸ்ஜிது நபவியிலிருந்து சுமார் 2 மைல் தொலைவில் உள்ளது. ஹஸ்ரத் குபைப் அவர்கள் பனூ ஹாரிஜ் பின் ஹஸ்ரஜ் கோத்திரத்தை சார்ந்தவராக இருந்தார்கள். ஒரு கூற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது (ரலி) அவர்களின் வீட்டில் தங்கியிருந்தார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷாம் பக்கம் 348 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சில அறிவிப்புகளுக்கேற்ப சுஹ் என்ற இடத்திலேயே தமக்கென வீட்டையும், ஆடைகளையும் உருவாக்குவதற்கு தொழிற்சாலை ஒன்றை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டிக் கொண்டார்கள்.

(மகாமாத்தே சீரத், தொகுதி 3 பக்கம் 131 – 2016 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

அதன் மூலம் வியாபாரமும் செய்தார்கள். இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் இந்த நற்குறிப்பு நடைபெறும்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகின்றேன் அதில் சவுத்ரி அஸ்கர் அலி சாஹிப் அவர்களின் நற்குறிப்பு முதலாவது ஆகும். அன்னார் இறைவழி கைதியாக இருந்தார்கள். அன்னார் பஹாவல்பூரைச் சார்ந்த முஹம்மது ஷரீஃப் சாஹிப் கலார் அவர்களின் மகனாக இருந்தார்கள். ஜனவரி 10 ஆம் தேதி கைதியாக இருந்த நிலையில் நோயுற்றார்கள். மேலும் அங்கு மருத்துவமனையிலேயே அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இந்த அடிப்படையில் அன்னார் ஷஹீதுகளில் ஒருவராகவே கணக்கிடப்படுவார்கள். கிடைத்த விவரங்களின் அடிப்படையில் மர்ஹூமிற்கு எதிராக 24 டிசம்பர் 2021 ஆம் தேதி பஹாவல்பூர் பக்தாத் அல்–ஜதீத் காவல் நிலையத்தில் அன்னாருக்கெதிராக C-295 என்ற சட்டப்பிரிவின் கீழ் நபித்துவ நிந்தனை (நவூதுபில்லாஹ்) என்ற குற்றச்சாட்டு பதியப்பட்டது. நபித்துவ நிந்தனை என்ற குற்றச்சாட்டை அஹ்மதிகள் மீது பொய்யாக எதிரிகள் சுமத்துகின்றனர். எனவே இந்த பிரிவின் கீழ் வழக்கு பதியப்பட்டது. டிசம்பர் 26 அன்று கைது செய்யப்பட்டார்கள். மர்ஹூம் கைது செய்யப்பட்ட பிறகு பஹாவல்பூர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிறையில் இரத்த வாந்தி எடுத்ததாலும், உடல்நிலை பாதிக்கப்பட்டதாலும் மர்ஹூம் 4 ஜனவரி 2022 அன்று பஹாவல்பூர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்கள். அங்கு சிகிச்சை நடைபெற்று வந்தது. ஜனவரி 10 ஆம் தேதி கைதியாக இருந்த நிலையிலேயே அன்னாரின் மரணம் நிகழ்ந்து விட்டது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மரணத்தின்போது மர்ஹூமின் வயது 70 ஆக இருந்தது. மர்ஹூமின் ஜாமின் விண்ணப்பம் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்தது. 8 ஜனவரி அன்று ஜாமின் வழக்கு நடக்க இருந்தது. ஆனால் காவல்துறை ஆவணங்களை கொண்டு வரவில்லை. எனவே நீதிபதி ஜனவரி 11 ஆம் தேதி வழக்கை தள்ளி வைத்தார். ஆனால் தீர்ப்பிற்கு முன்பாகவே மர்ஹூம் உண்மையான எஜமானரின் சந்நிதானத்தில் ஆஜராகி விட்டார். மர்ஹூம் மூன்று மாதம் 15 நாட்கள் இறைவழி கைதியாக இருந்துள்ளார்கள்.

மர்ஹூம் 1971 ஆம் ஆண்டு நடுத்தர வயதில் மெட்ரிக் முடித்த பிறகு சுயமே பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து கொண்டார்கள். தனது குடும்பத்தில் தனித்த அஹ்மதியாக இருந்தார்கள். அஹ்மதிய்யத்தில் இணைந்த பிறகு எதிர்ப்பான சூழல்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதன் பிறகும் உறுதிப்பாட்டுடன் இருந்தார்கள். F.C கல்லூரியிலிருந்து அன்னார் M.Sc Maths பட்டம் பெற்றார்கள். கல்வி பயிலும்போது அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டதால் பெற்றோர்கள் அன்னாருக்கு பொருளாதார உதவியை நிறுத்தி விட்டார்கள். மேலும் அஹ்மதிய்யத்தை விட்டு விலகினால் தான் இனி பொருளாதார உதவிகள் வழங்கப்படும் என்ற நிபந்தனையை வைத்தனர். அதன் பிறகும் கூட மர்ஹூம் உறுதிப்பாட்டுடன் இருந்தார்கள். மேலும் பிள்ளைகளுக்கு டியூஷன் நடத்தி தமது கல்விச் செலவுகளை முழுமை செய்து கொண்டார்கள். இருந்தபோதிலும் மர்ஹூமின் தந்தை மர்ஹூமின் உறுதிப்பாடு மற்றும் இறையச்சத்தால் தாக்கத்திற்கு உள்ளாகி பிற்காலத்தில் எதிர்ப்பை கைவிட்டு விட்டார். மேலும் தனது அஹ்மதி மகன் அஹ்மதி அல்லாத தந்தையின் சொத்திலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்கப்பட்டு விடக் கூடாது என்ற அச்சத்தை கருத்தில் கொண்டு தமது வாழ்நாளிலேயே அவரது பெயருக்கு அவருக்குரிய சொத்தை மாற்றி விட்டார். அன்னாரின் தந்தை அன்னாருடன் இந்த வகையில் நல்ல முறையில் நடந்து கொண்டார்.

மர்ஹூம் இறை அருளால் 1/8 ஒரு பங்கை வஸிய்யத் செய்திருந்தார்கள். பொருளாதார திட்டத்தில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெறக் கூடியவராக இருந்தார்கள். புதிய ஆண்டிற்கான அறிவிப்பு செய்யப்பட்ட உடனேயே 100 சதவிகித சந்தாவை செலுத்தி விடுவார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் மிகவும் உணர்வுப்பூர்வமான நேசம் இருந்தது. வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள், தலைமையக விருந்தினர்களுக்கு கண்ணியம் வழங்கினார்கள். மேலும் விருந்து உபசரிப்பு போன்ற பண்புகள் அன்னாரிடம் மிகத் தெளிவாக அமைந்திருந்தது. ஜமாஅத் சுற்றுப் பயணத்தின்போது தமது வாகனத்தை எப்போதும் கொடுத்து விடுவார்கள். இறைவன் பக்கம் மக்களை அழைக்கின்ற பணியில் அன்னாருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. மிகவும் தைரியசாலியாகவும், அல்லாஹ்வின் பக்கம் அழைக்கக் கூடிய வீரராகவும் மர்ஹூம் இருந்தார்கள். அல்லாஹ் பல நல்ல ஆன்மாக்களுக்கு மர்ஹூமின் மூலமாக பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைவதற்கு நற்பேறு வழங்கியுள்ளான்.

நோன்பு மற்றும் தொழுகை ஆகியவற்றை மட்டுமின்றி தஹஜ்ஜுத் தொழுகையையும் பேணி வந்தார்கள். ஏழைகளை பராமரிப்பவராகவும், படைப்பின சேவை செய்யக் கூடிய மற்றும் மக்களுக்கு பயனளிப்பவராகவும் இருந்தார்கள். குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பொருளாதார மற்றும் நல்லொழுக்க தொண்டிற்கான நற்பேறு பெற்றார்கள். மர்ஹூமிற்கு ஷஹீதாகுவதற்கு மிகுந்த ஆசை இருந்தது. அதனை அல்லாஹ் இவ்வாறு முழுமை செய்து விட்டான்.

மர்ஹூமின் மனைவி அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: சிறையில் சந்திப்பின்போது மர்ஹூம் இதனைக் குறிப்பிட்டார்கள். அதாவது அல்லாஹ்வின் புறமிருந்து அன்னாருக்கு மூன்று முறை ஸலாத்திற்கான தூதுச் செய்தி கிடைத்தது. சிறையிலிருந்து எனது மய்யத் எடுத்துச் செல்லப்படுவதை நான் கண்டேன் என்று அன்னார் தனது இரண்டாவது கனவைப் பற்றி கூறினார்கள். மர்ஹூமிற்கு நாஸிம் அன்ஸாருல்லாஹ் ஆகவும், பஹாவல்பூர் நகரத்தின் ஸயீம் ஆலாவாகவும், தஃவத்தே இலல்லாஹ் செயலராகவும், வக்ஃபே ஜதீத் செயலராகவும், மாவட்ட இஸ்லாஹ் வ இர்ஷாத் செயலராகவும் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்துள்ளது. வஃபாத்தின்போது அன்னார் மாவட்ட காஸியாகவும் இருந்துள்ளார்கள்.

மர்ஹூம் தமது நினைவாக தனது மனைவியை மட்டுமின்றி 2 மகன்களையும், 1 மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் ஒரு மகன் வெளிநாட்டில் உள்ளார். மகளும் கனடாவில் இருக்கின்றார். அல்லாஹ் அஸ்கர் அலி கலார் சாஹிப் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் உறவினர்களுக்கு அழகிய பொறுமையை வழங்குவானாக. மேலும் அன்னாரின் அடிச்சுவட்டில் நடப்பதற்கு அவர்களுக்கு நற்பேறு வழங்குவானாக.

ஏனைய இறைவழி கைதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக.

இரண்டாவது நற்குறிப்பு ரப்வாவின் வகாலத் உலியா ஊழியர் மிர்ஸா மும்தாஸ் சாஹிப் அவர்களுடையதாகும். 85 வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார் அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தையார் கேப்டன் டாக்டர் ஷேர் முஹம்மது அலி சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1923 ஆம் ஆண்டில் பைஅத் செய்திருந்தார்கள். மிர்ஸா மும்தாஸ் சாஹிப் அவர்கள் 1964 ஆம்

ஆண்டில் அமானத் தஹ்ரீகே ஜதீத் அலுவலகத்தில் எழுத்தாளராக தனது தொண்டை தொடங்கினார்கள். மேலும் இறுதி மூச்சு வரை 52 ஆண்டுகள் தொண்டாற்றும் நற்பேறு பெற்றுள்ளார்கள். மதிப்பிற்குரிய சவுத்ரி முஸஃப்பருத்தீன் பங்காலி சாஹிப் அவர்களின் மகள் மாஜிதா பேகம் அவர்களுடன் அன்னாரின் திருமணம் நடந்தது. அல்லாஹ் அன்னாருக்கு இரண்டு மகன்களையும், ஒரு மகளையும் வழங்கியுள்ளான்.

அன்னாரின் மகள்வழிப் பேரன் காலித் மன்ஸூர் சாஹிப் எழுதுகின்றார்கள்: எங்களது தாய்வழிப் பாட்டனார் எப்போதும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதுடன் ஜமாஅத்துடன் இணைந்திருக்கும்படி எங்களுக்கு அறிவுறுத்தி வந்தார். ஜமாஅத்தாக தொழுவதன் முக்கியத்துவத்தை எங்களுக்கு கூறி வந்தார். மேலும் அதற்கு எங்களுக்கு அறிவுரை கூறி வந்தார். என்னுடைய தந்தையின் மரணத்திற்குப் பிறகு எனது தாய்வழிப் பாட்டனார் எங்களின் தந்தையின் எந்தக் குறைவையும் உணரச் செய்யவில்லை. எப்போதும் அன்னாரை நாங்கள் எங்களது நண்பராக கண்டோம். எப்போதும் ஜமாஅத் பணிகளில் மும்முரமாக கண்டுள்ளோம். ஒரு முன்னுதாரணமான நண்பராகவும், தந்தையாகவும், ஜமாஅத்தின் ஒரு முன்னுதாரணமான ஊழியராகவும் மர்ஹூம் இருந்தார்கள். எல்லாரிடமும் அன்புடனும், நேசத்துடனும், பரிவுடனும் நடந்து வந்தார்கள். மிகவும் நேரத்தை பேணி வந்தார்கள். அதன் முக்கியத்துவத்தை கூறி வந்தார்கள்.

அன்னாருடன் பணி செய்யக் கூடிய ஒரு ஊழியர் செய்யது நாஸிர் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒரு நீண்ட காலம் அன்னாருடன் பணி செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. மிகவும் தூய்மையுடன் பணி செய்து வந்தார்கள். தனது பணியை முடித்த பிறகு தமது தோழர்களின் பணியிலும் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

பின்னர் லுக்மான் சாகிப் சாஹிப் என்ற ஒரு முரப்பி கூறுகின்றார்: உடல்நிலையில் பலவீனம் இருந்தபோதும் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் மிகவும் சுறுசுறுப்புடன் செயலாற்றி வந்ததை நான் கண்டுள்ளேன். இறுதி நேரம் வரை நினைவாற்றல் சிறப்பாக இருந்தது. பல ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு விவகாரத்தைக் குறித்தும் உடனடியாக கூறி விடுவார்கள். இன்ன விவகாரம் இந்த கோப்பில் இந்த இடத்தில் உள்ளது என்று கூறி விடுவார்கள். மிக பண்பட்ட நகைச்சுவையை விரும்பி வந்தார்கள். அதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்து வந்தார்கள். ஆனால் வீணான விஷயங்களை பேசுவதும், வீண் கதையடிப்பதும் அவர்களின் இயல்பில் இல்லாத விஷயமாக இருந்தது. தமது பணியை முடித்த பிறகு எஞ்சிய நேரத்தில் தனது அலுவலகத்தின் நாற்காலியில் அமர்ந்து கொண்டு பழைய கோப்புகளை எடுத்துக் கொண்டு அதைப் படிக்கத் தொடங்கி விடுவார்கள்.

டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் அவர்களும் அன்னாரைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அன்னாரிடம் மிகவும் தாழ்மைகுணம் இருந்தது. ஒரு மூத்த ஊழியராக இருந்தபோதிலும் மருத்துவமனைக்கு வரும்பொழுது தனது முறைக்காக காத்திருப்பார்கள். ஒருபோதும் அவசரப்பட மாட்டார்கள். அன்னாரிடத்தில் நன்றியுணர்வும், நன்மையை நினைவு கூர்வதும் சிறப்புப் பண்பாக இருந்தது. அன்னாரிடத்தில் பொறுமை குணமும் மிக அதிகமாக இருந்தது. நீண்ட நாட்களாக நோயில் வேதனைப்பட்டு வந்த பிறகும் அன்னார் பொறுமையின்மையை வெளிப்படுத்தவில்லை. அலுவலகத்தின் ஒரு சில ஊழியர்களைத் தவிர்த்து அன்னாருக்கு அதிகமான நண்பர்களும் இருந்ததில்லை.

நானும் பார்த்துள்ளேன். அன்னார் மிகவும் மௌனமான இயல்பைக் கொண்டவராக இருந்தார்கள். தனது சில நண்பர்களுடனே இருந்தார்கள். அலுவலகத்திலிருந்து வீட்டிற்கும், வீட்டிலிருந்து அலுவலகமும் அவர்களது வழக்கமாக இருந்தது. ஆயினும் மிகக் கடுமையாக பணி செய்யக் கூடியவராகவும், மிக தூய்மையாகவும், நன்றியுணர்வுடனும் அன்னார் வாழ்க்கையை கழித்துள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் முன்னாள் நிர்வாகியான ஓய்வுபெற்ற கர்னல் டாக்டர் அப்துல் காலிக் சாஹிப் அவர்களுடையதாகும். 97 வது வயதில் கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தை முஹம்மது ஆலிம் சாஹிப் அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1919 ஆம் ஆண்டில் பைஅத் செய்திருந்தார்கள். அதே நேரம் டாக்டர் அப்துல் காலிக் சாஹிப் அவர்கள் 1938 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். தனது பைஅத்தின் விவரத்தை கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

எங்களது தந்தையார் அல்ஃபஸல் பத்திரிகை வாங்கி வந்தார்கள். அதனைப் படிப்பதன் மூலம் அஹ்மதிய்யத்தின் பக்கம் எனக்கு கவனம் ஏற்பட்டது. 1938 ஆம் ஆண்டில் நாங்கள் மூன்று சகோதர, சகோதரிகளும் பைஅத் செய்து விட்டோம். அன்னாரின் தாயார் நோன்பையும், தொழுகையையும் பேணக் கூடியவராக இருந்தார்கள். நாங்கள் பைஅத் செய்த பிறகு சிறிது காலத்திலேயே அன்னாரும் பைஅத் செய்து விட்டார்கள். ஜூப்ளி ஜல்ஸாவான 1939 ஆம் ஆண்டு ஜல்ஸாவில் முதல் முறையாக நான் காதியான் சென்றேன். பின்னர் பெரும்பாலான ஜல்ஸாவில் செல்வதற்கு வாய்ப்பு கிடைத்து வந்தது. அன்னாரின் மனைவி 1987 ஆம் ஆண்டு மரணமடைந்து விட்டார்கள். அன்னாருக்கு 2 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர்.

அன்னாரின் ஒரு மகனான டாக்டர் அப்துல் பாரி சாஹிப் அஹ்மதிய்யா ஜமாஅத் இஸ்லாமாபாதின் அமீராக உள்ளார்கள். 1974 ஆம் ஆண்டு பூட்டோ அரசாங்கம் அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர்கள் என்ற கொடூரமான சட்டத்தை நிறைவேற்றியபோது டாக்டர் சாஹிப் தனது அரசாங்க பணியை ராஜினாமா செய்து விட்டார்கள். மேலும் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் தமது தொண்டுகளை ஆற்றினார்கள். தலைமையகத்திலிருந்து அன்னார் 1977 ஆம் ஆண்டு சிராலியோனிற்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு 3 ஆண்டுகள் மனித இனத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. பின்னர் 1992 ஆம் ஆண்டு PIA தாஷ்கந்திற்கு விமானத்தை அனுப்ப தொடங்கியது. அப்போது டாக்டர் சாஹிப் அந்த வாய்ப்பை உகந்ததாக கருதி தாஷ்கந்த் மற்றும் உஸ்பகிஸ்தானிற்கு வக்ஃபே ஆர்ஸியில் செல்வதற்கு விண்ணப்பம் செய்தார்கள். தலைமையகம் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டது. எனவே அன்னார் தமது சிறிய சகோதரியுடன் சமர்கந்த் மற்றும் புகாரா போன்ற இடங்களில் வக்ஃபே ஆர்ஸிக்காக சென்றார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் மனித இனத்திற்கு தன்னலமற்ற தொண்டுகளை அன்னார் ஆற்றியுள்ளார்கள்.

அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்துள்ளது. 1994 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னாரை ரப்வாவின் ஃபஸ்லே உமர் மருத்துவமனைக்கு தலைமை நிர்வாகியாக நியமித்தார்கள். அங்கு அன்னார் ஜூன் 2005 ஆண்டு வரை சுமார் 10 ஆண்டுகளுக்கும் கூடுதலாக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். அன்னாரின் காலத்தில் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் பல கட்டுமான மற்றும் விரிவாக்க திட்டங்கள் முழுமையடைந்தன.

அடுத்து அன்னாரைக் குறித்து ஒரு சிறுவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது 80, 81 வயதிலும் அன்னார் மார்க்கத் தொண்டிற்கான உணர்வில் இளைஞராக இருந்தார்கள். ஆயினும் நான் முதுமையை அடைந்து வருகின்றேன் என்ற உணர்வு அன்னாருக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. எனவே அன்னார் 2005 ஆம் ஆண்டில் விண்ணப்பித்தார்கள். என்னிடம் அன்னார் கூறினார்கள். எனவே அன்னார் ஓய்வு பெற்று விட்டார்கள். அங்கிருந்து சென்ற பிறகு பின்னர் அன்னார் இஸ்லாமாபாதில் நிரந்தரமாக குடிபெயர்ந்து விட்டார்கள். அங்கு இஸ்லாமாபாதிலும் உள்ளூர் காஸி என்ற அடிப்படையில் தொண்டாற்றி வந்தார்கள்.

அன்னாரின் மூத்த மகன் டாக்டர் அப்துல் பாரி கூறுகின்றார்: பிள்ளைகளின் மார்க்க மற்றும் நல்லொழுக்க தர்பிய்யத்தில் அன்னாருக்கு எப்போதும் கவலை இருந்து வந்தது. காலையிலும் மாலையிலும் எப்போதும் திருக்குர்ஆன் ஓதுவதில் மும்முரமாக இருந்து வந்தார்கள். அது அன்னாருக்கு மிகவும் பிடித்தமான பணியாக இருந்தது. முக்கிய விவகாரங்களில் திருக்குர்ஆனின் ஒளியிலேயே எல்லா முடிவுகளையும் அன்னார் எடுத்து வந்தார்கள்.

அன்னாரின் மருமகன் மருத்துவர் முஸஃப்பர் அலி நாஸிர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். அன்னாரும் வாகேன்ட் மாவட்டத்தின் துணை அமீர் ஆவார்கள். இன்று வரை நாள் முழுவதும் இந்த அளவிற்கு எவரையும் திருக்குர்ஆன் ஓதுவதை நான் பார்த்ததில்லை. அன்னாருக்கு திருக்குர்ஆன் மீது நேசம் இருந்தது. ஒரு முறை மருத்துவமனையிலிருந்து அன்னார் Discharge ஆனார்கள். அப்போது இனி எங்களுக்கு திருக்குர்ஆனை யார் ஓதிக் கொடுப்பார் என்று ஊழியர்கள் கவலையடைந்தனர். குளிர், வெப்பம் இரண்டு நிலையிலும் தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றுவதில் அன்னார் எங்களுக்கு ஒரு

முன்னுதாரணமாக இருந்தார்கள். கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் ஆழமான நேசம் கொண்டிருந்தார்கள். மிக எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். ஒருபோதும் எந்த முறையீடும் செய்ததில்லை.

அன்னாரின் சகோதரரின் பேரனான அப்துஸ் சமத் ரிஸ்வி இவ்வாறு எழுதியுள்ளார்: அன்னார் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக எல்லா துன்பங்களையும் சகித்துக் கொண்டார்கள். தனது மகிழ்ச்சியிலிருந்து விலகிக் கொண்டார்கள். அன்னாருடைய ரப்வா வீட்டில் பல முறை எனக்கு தங்குவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அன்னாரின் இருப்பு என்னைப் பொறுத்தவரை உயிருள்ள இறைவனை அடையாளம் காண்பதற்கு காரணியாக அமைந்தது. அன்னாரின் தஹஜ்ஜுத் தொழுகை தன்னிகரற்றதாக இருந்து வந்தது. கிலாஃபத்தின் மீதான நேசத்திலும், மரியாதையிலும் அன்னார் மூழ்கி இருந்தார்கள். அது எங்களின் சிறந்த தர்பிய்யத்திற்கு காரணியாக அமைந்தது.

ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் மருத்துவர் அப்துல் காலிக் சாஹிப் கூறுகின்றார்கள்: டாக்டர் சாஹிப் மருத்துவமனையின் இளம் மருத்துவர்களிடம் அன்புடனும், பரிவுடனும் நடந்து வந்தார்கள். ஜூனியர் டாக்டர்களின் பயிற்சியின் பக்கம் சிறப்பான கவனம் செலுத்தும்படி சீனியர் மருத்துவர்களுக்கு கவனமூட்டி வந்தார்கள். மருத்துவமனையின் செல்வங்களை நேர்மையுடன் மேற்பார்வை செய்தும், பாதுகாத்தும் வந்தார்கள். ஏழை, எளிய மக்களுக்கு தனது சொந்த செலவிலிருந்து உதவி செய்து வந்தார்கள்.

டாக்டர் முஹம்மது அஹ்மது அஷ்ரஃப் சாஹிப் கூறுகின்றார்கள்: மர்ஹூம் மிகவும் பொறுமையான இயல்பைக் கொண்ட மனிதராக இருந்தார்கள். மென்மையான உள்ளம் படைத்தவராகவும், அதிகமான தைரியசாலியாகவும் இருந்தார்கள். மிகவும் பரிவு கொண்டவராக இருந்தார்கள். அதிகம் பேசுகின்ற பழக்கம் அன்னாரிடத்தில் இருந்ததில்லை. ஆயினும் நிர்வாக ரீதியில் சிறிய சிறிய விஷயங்களில் ஆழமான பார்வை கொண்டிருந்தார்கள். விதிமுறைகளை பேணச் செய்யக் கூடியவராக இருந்தார்கள். பின்னர் வக்ஃபே ஆர்ஸிக்காக ஏனைய மருத்துவர்களுக்கும் வலியுறுத்தி வந்தார்கள். ஃபஸ்லே உமர் மருத்துவமனைக்கு வரும்படியும் தமது மருமகனுக்கும், மகளுக்கும் கூறி வந்தார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் நன்மைகளை அன்னாரின் பிள்ளைகளிடத்திலும் தொடரச் செய்வானாக. தொழுகைகளுக்குப் பிறகு இவர்களது ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்படும்.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

*மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

என்பது ஒரு பகுதியாகும். மற்றொரு பகுதி நமது நஃப்ஸின் மீது நமக்கு என்னென்ன உரிமைகள் உள்ளன? மூன்றாவதாக மனித இனத்தின் மீது நமக்கு என்னென்ன கடமைகள் உள்ளன? என்பதாகும்.

**இறைநேசர்களின் அற்புதங்கள்**

அன்னார் கூறினார்கள்: நபித்துவ காலம் என்பது نُوْرٌ عَلٰى نُوْر (ஒளி, அது பல ஒளிகளின் ஒளிப்பிழம்பாக இருக்கும்) காலமாக இருந்தது. ஒரு (ஆன்மீக) சூரியன் இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு இறைநேசர்களின் அசாதாரண வெளிப்பாடுகள் மற்றும் அற்புதங்கள் பற்றி கூறப்படுகின்றன. எனினும் அவை தம்முடன் தெளிவான சான்றுகளை கொண்டிருப்பதில்லை. மேலும் அவற்றின் வரலாறையும் சரியாக நம்மால் அறிய முடிவதில்லை. உதாரணமாக ஷேக் அப்துல் காதிர் ஜெய்லானி (ரஹ்) அவர்களின் அற்புதங்கள் அன்னாரின் 200 வருட காலத்திற்குப் பிறகு எழுதப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி அந்த மக்களுக்கு எதிரிகளுடன் போட்டியிடுவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. மேலும் நாம் குழப்பங்களை சந்திப்பதைப் போன்று அவர்களுக்கு குழப்பங்களை சந்திக்க நேரிடவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 354 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தொலைபேசி எண்: 1800 103 2131**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

*முதல் பக்கத்தின் தொடர்ச்சி... ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தஃப்ஸீரே கபீரிலிருந்து...*

கூடியவர் உயிருடன் இருப்பதும் அவசியமாகும். அப்போது தான் ஏதாவது சீர்கேடு ஏற்பட்டால் அவர் அதனை சீர் செய்ய முடியும். இந்த சான்றின் மூலம் பொய் தெய்வங்கள் நேர்வழி வழங்குவதற்கு தகுதியானவர்கள் என்ற கருத்து மறுக்கப்பட்டுள்ளது. மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் எவர்களை வணங்குகின்றீர்களோ அவர்கள் அனைவரும் மரணித்து விட்டனர். அவ்வாறிருக்க அவர்கள் எவ்வாறு நேர்வழி காட்ட முடியும்? இக்காலத்தில் சீர்கேடு தோன்றினால் அதனை அவர்கள் எவ்வாறு நீக்குவார்கள்?

வேடிக்கை என்னவென்றால், முஸ்லிம்களிடத்தில் இந்த வழிகாட்டலுக்கு எதிராகவும் கொள்கைகள் உருவாகி வருகின்றன. ஒரு பெரும் கூட்டம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருப்பதாக நம்புகிறது. ஆனால் திருக்குர்ஆனின் காலத்தில் எந்த அளவிற்கு பொய் தெய்வங்கள் இருந்தனரோ அவர்கள் அனைவரும் மரணித்து விட்டனர் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆக கிறிஸ்தவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவனாக நம்பி வந்தார்கள். இந்த இறை சாட்சியத்தின் அடிப்படையில் அவர் திருக்குர்ஆன் இறங்குவதற்கு முன்பே மரணமடைந்து விட்டார். அவர் உயிருடன் இருக்கின்றார் என்று ஏற்றுக் கொண்டால் பின்னர் நவூதுபில்லாஹ் அவர் பொய் தெய்வங்களை சார்ந்தவராக இல்லை. மாறாக, உண்மையிலேயே இறைவனாக இருக்கின்றார் என்று ஒப்புக் கொள்ள நேரிடும். நவூதுபில்லாஹ் மின் தாலிக்.

இந்த இரண்டு வசனங்களில் மிக வலிமையான சான்றுகளால் ஷிர்க் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் அதற்கு நான்கு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

(1) لَا يَخْلُقُوْنَ அவர்கள் படைப்பதில்லை. இறைவனாக இருப்பதற்கு படைப்பாளனாக இருப்பது அவசியமாகும். ஏனென்றால் முழுமையான இருப்பு தான் தெய்வமாக இருக்க முடியும்.

(2) அவர்கள் சுயமே படைக்கப்பட்டுள்ளனர். அதாவது அவர்களிடத்தில் மாற்றங்கள் காணப்படுகின்றன. மாற்றங்களின் தேவைகள் என்பது குறைபாடாக இருக்கின்றது. எனவே அவர்கள் தெய்வங்களாக இருக்க முடியாது.

(3) அவர்கள் மரணித்தவர்கள். உயிருள்ளவர்கள் அல்ல. அதாவது இக்காலத்தில் அவர்களால் நன்மையும் பயக்க முடியாது. தீமையும் பயக்க முடியாது. எப்போதும் நன்மை, தீமைக்கு ஆற்றல் பெற்றவரே இறைவனாக இருக்க முடியும்.

(4) அவர்கள் எப்போது எழுப்பப்படுவார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. ஒருவகையில் அவர்களின் முடிவும் மற்றவர்களின் கையில் உள்ளது.

இந்த கடைசி சான்றைக் குறித்து அதற்கு என்ன தெளிவு உள்ளது? என்று கூற முடியும். அதாவது அவர்கள் எப்போது எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள் என்பதற்கு என்ன சான்று உள்ளது? எனவே அதற்குரிய பதில் என்னவென்றறால், மிக அதிகமாக வணங்கப்படும் பொய் தெய்வம் ஹஸ்ரத் மஸீஹ் ஆவார். அவர் எழுப்பப்படும் நாளைக் குறித்து சுயமே இவ்வாறு கூறுகின்றார்: ஆனால் அந்த நாளையும், அந்த நாழிகையையும் பற்றி பிதா ஒருவரைத் தவிர வேறு எவரும் அறிய மாட்டார். விண்ணிலுள்ள வானவரும் அறிய மாட்டார். குமாரனும் அறிய மாட்டார். அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாய் இருங்கள். விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். (மாற்கு அதிகாரம் 13 வசனம் 32,33)

எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இந்த ஒப்புதலுக்குப் பிறகு ஏனைய பொய் தெய்வங்களாக வணங்கப்படும் மனிதர்களைக் குறித்தும் நாம் அவ்வாறே எண்ணம் கொள்ள முடியும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 151 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

(12 வது பக்கத்தின் தொடர்ச்சி...)

எந்த அளவிற்கு சாத்தியமோ எல்லா வகையான பகைமை மற்றும் குரோதத்தையும் அகற்றுவதற்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வுகளை தேடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று திருக்குர்ஆன் போதிக்கின்றது. நிச்சயமாக மக்களுடன் நுட்பமான ஞானம் மற்றும் மென்மையுடன் உரையாடுவது அவர்களின் உள்ளங்களில் நேர்மறையான மற்றும் அன்பின் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் உள்ளங்களிலிருந்து வெறுப்பையும், பகைமையையும் அழிப்பதற்கு காரணியாக அமைகின்றது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இக்காலத்தில் நாம் நம்மை மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்களாகவும், நாகரீகம் உடையவர்களாகவும் கருதுகின்றோம் என்பதில் ஐயமில்லை. பிள்ளைகளின் மருத்துவ மற்றும் கல்வி வசதிகளுக்காகவும், அவர்களின் தாய்மார்களின் உடல் ஆரோக்கியத்தில் வசதிகளை ஏற்படுத்தும் வகையில் உலகளாவிய வகையில் சேவை அமைப்புகளை நாம் திறந்து வைத்துள்ளோம். அதேபோன்று மனித இனத்தின் மீதான அனுதாபம் என்ற பெயரில் ஏனையவர்களுக்கும் ஏராளமான அமைப்புகள் உள்ளன. நாம் இவை அனைத்தையும் செய்துள்ளோம். ஆனால் நாம் இதனையும் சிந்திக்க வேண்டும். மேலும் காலத்தின் முக்கிய தேவையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நாம் நம்மையும், மற்றவர்களையும் இந்த அழிவிலிருந்தும் நாசத்திலிருந்தும் எவ்வாறு பாதுகாக்க முடியும்? என்பதையும் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: கடந்த **60, 70** ஆண்டுகளைக் காட்டிலும் தற்போது உலகம் முன்பை விட அதிகமாக நெருக்கமாக வந்து விட்டது. **60, 70** வருடங்களுக்கு முன்பு நியூஸிலாந்து ஐரோப்பா மற்றும் ஆசியாவிலிருந்து தொலைவில் ஒதுங்கி இருந்த ஒரு நாடாக இருந்தது. ஆனால் இன்று ஓர் உலகளாவிய சமுதாயத்தின் கண்டிப்பான அங்கமாக அது ஆகி விட்டது. எனவே போரிலிருந்து எந்தவொரு நாடும், பகுதியும் பாதுகாப்பாக இருக்க முடியாது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களின் தலைவர்களும், உங்களின் அரசியல்வாதிகளும் உங்கள் சமுதாயத்தின் பாதுகாவலர்கள் ஆவர். நாட்டின் பாதுகாப்பிற்கும், முன்னேற்றத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் அவர்களே பொறுப்பாளர்கள் ஆவர். எனவே அவர்கள் அனைவரும் இந்த கவலைக்குரிய நேரத்தை எப்போதும் தமது எண்ணங்களில் வைக்க வேண்டும். அதாவது போர்களின் அபாயகரமான தாக்கங்கள் வெகு தொலைவு வரை இருக்கும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நாம் அல்லாஹ்விற்கும் நன்றி செலுத்த வேண்டும். அவன் சில வல்லரசு நாடுகளுக்கு சமீபத்தில் அறிவு வழங்கினான். போர்களின் விளைவால் ஏற்படக் கூடிய கொடிய விளைவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக இந்தப் போர்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: சமீபத்தில் ரஷ்ய அதிபர் சில வல்லரசுகளை சிரியாவின் மீது தாக்குதல் தொடுப்பதிலிருந்து தடுப்பதற்கு முயற்சி செய்துள்ளார். எல்லா நாடுகளும் அவை பெரிய நாடாக இருந்தாலும் சரி அல்லது சிறிய நாடாக இருந்தாலும் சரி அனைவருடனும் ஒன்றுபோல் நடக்க வேண்டும் என்று அவர் மிகத் தெளிவாக கூறியுள்ளார். நீதியின் தேட்டங்கள் உறுதி செய்யப்படாவிட்டால் ஏனைய சமுதாயங்கள் தமது விருப்பப்படி போருக்கு புறப்பட்டு விட்டால் பின்னர் ஐக்கிய நாட்டு சபைக்கும் League of Nations–ற்கு ஏற்பட்ட வேதனை மிக்க நிலையே ஏற்படும் என்று அவர் கூறியிருந்தார். என்னைப் பொருத்தவரை இந்த ஒப்பீடு முற்றிலும் சரியானதாகும். ஆயினும் அவரது அனைத்து பாலிஸிகளுடனும் எனக்கு உடன்பாடில்லை. அவர் மேலும் ஒரு படி முன்னால் சென்றிருக்க வேண்டும். மேலும் ஐக்கிய நாட்டு சபையின் பாதுகாப்பு கவுன்ஸிலுள்ள ஐந்து உறுப்பு நாடுகளின் வீட்டோ அதிகாரம் நிரந்தரமாக பறிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறியிருக்க வேண்டும். அப்போது தான் அனைத்து சமுதயாங்களிலும் உண்மையான நீதியும், நேர்மையும் மேலோங்கி நிற்க முடியும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: கடந்த ஆண்டு வாஷிங்டன் டிஸியில், கேப்பிட்டல் ஹில்லில் சொற்பொழிவு ஆற்றுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்திருந்தது. ஏராளமான செனடர்களும், காங்கிரஸ்மேன்களும், சிந்தனையாளர்களின் பிரதிநிதிகளும், ஏனைய பல்வேறு துறையுடன் தொடர்புடைய கல்வியறிவு படைத்த மக்களும் கலந்து கொண்டிருந்தனர். அனைத்து தரப்பு மக்களுடனும் ஒன்றுபோல் நடக்கும்போதுதான் நீதியின் தேட்டங்கள் முழுமையடைய முடியும் என்று நான் அவர்களிடம் தெளிவாக கூறியிருந்தேன். ஒருவேளை நீங்கள் சிறியவர், பெரியவர், பணக்காரர், ஏழை என்று நாடுகளுக்கு மத்தியில் பாகுபாட்டை நிலைநாட்ட விரும்பினால், வீட்டோ அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள விரும்புகின்றீர்கள் என்றால் பின்னர் நிச்சயமாக துன்பமும், அமைதியின்மையும் பரவும். இன்னும் கூறப்போனால் உலகில் ஏற்கனவே அமையின்மை தென்படத் தொடங்கி விட்டது என்று நான் அவர்களுக்கு கூறியிருந்தேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனவே ஒரு முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற அடிப்படையில் உலகின் கவனத்தை அமைதியை நிலைநாட்டுவதன் பக்கம் கவனமூட்டுவது எனது கடமையாகும். அதனை நான் எனது கடமையாக கருதுகின்றேன். ஏனென்றால், இஸ்லாத்தின் அசல் பொருள் என்பது அமைதி மற்றும் பாதுகாப்பு என்பதே ஆகும். ஒருவேளை சில முஸ்லிம் நாடுகள் தீவிரவாதத்தின் வெறுப்புமிக்க செயல்களை செய்கின்றார்கள் என்றால் அல்லது அந்தப் பணிகளுக்கு ஆதரவு அளிக்கின்றார்கள் என்றால் அதிலிருந்து இஸ்லாமிய போதனைகள் போர் மற்றும் குழப்பத்திற்கு போதனை தருகின்றன என்ற முடிவிற்கு வந்து விடக் கூடாது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் தற்போது திருக்குர்ஆனின் ஒரு வசனத்தின் ஆதாரத்தை கொடுத்துள்ளேன். அதே வசனத்தில் இந்தப் பாடமும் இடம் பெற்றுள்ளது. அதாவது அமைதி எவ்வாறு நிலைநாட்டப்பட முடியும்? என்று அதில் கூறப்பட்டுள்ளது. நன்றி தொடர்பான இஸ்லாமிய போதனைகளை நான் முன்னரே எடுத்துரைத்து விட்டேன். அதுவும் மனித இனத்தின் கவனத்தை அன்பு மற்றும் சகோதரத்துவத்தை பரப்புவதன் பக்கம் கவனமூட்டுகின்றது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எப்போதும் சலாம் கூறும்படி தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு போதனை வழங்கியுள்ளார்கள். அதன் பொருள் என்னவென்றால், எப்போதும் அமைதியை பரப்பிக் கொண்டே இருங்கள் என்பதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து நமக்கு இந்த விஷயம் தெரிய வருகின்றது. அதாவது அன்னார் (ஸல்) அவர்கள் முஸ்லிம் அல்லாத அனைத்து மக்களுக்காகவும் அவர்கள் யூதராகவோ, கிறிஸ்தவராகவோ அல்லது வேறு எந்தவொரு மதம் அல்லது கொள்கையை சார்ந்தவராகவோ இருந்தாலும் சரியே! அமைதியை அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு ஏன் செய்தார்கள் என்றால் அன்னார் (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை அனைத்து மக்களும் இறைவனின் படைப்பினம் ஆவார்கள். இறைவனின் பெயர்களில் ஒரு பெயர் ஸலாம் அதாவது அமைதிக்கான வழிமுறை என்பதாகும். எனவே அன்னார் (ஸல்) அவர்கள் அனைத்து மனித இனத்திற்கும் அமைதி மற்றும் பாதுகாப்பை விரும்பியிருந்தார்கள்.

நான் பாதுகாப்பு தொடர்பாக சில இஸ்லாமிய போதனைகளை குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இதனையும் நான் தெளிவுபடுத்தி விடுகின்றேன். அதாவது நேரத்தின் குறைவின் காரணமாக சில அம்சங்களை மட்டுமே நான் குறிப்பிட்டுள்ளேன். உண்மையில் அதுபோன்ற கட்டளைகள் மற்றும் போதனைகளால் இஸ்லாம் நிறைந்துள்ளது. அது அனைத்து மக்களுக்கும் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான போதனையை வழங்குகின்றது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நீதியை நிலைநாட்டுவது தொடர்பாக இஸ்லாம் என்ன கூறுகின்றது? சூரா அல்மாயிதாவின் **9** வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்ட மக்களே! அல்லாஹ்வுக்காக வலிமையுடன் கண்காணித்தவாறு நீதிக்கு ஆதரவாக சாட்சி கூறுபவர்களாக நிலைத்திருங்கள். எந்தவொரு சமுதாயத்தின் மீதான பகைமையும் உங்களை ஒருபோதும் அநீதியிழைக்குமாறு தூண்ட வேண்டாம். நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இது இறையச்சத்திற்கு மிகவும் நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் எப்போதும் நன்கு அறிந்து வருகின்றான்.

எனவே இந்த வசனத்தில் திருக்குர்ஆன் நீதியின் உயர்தரமான அந்தஸ்துகளை சுட்டிக் காட்டியுள்ளது. மிருகத்தனமான மற்றும் முட்டாள்தனமான செயல்களை செய்த பிறகும் தம்மை முஸ்லிம் என்று கூறிக் கொள்கின்ற மக்களுக்கு இந்த கட்டளை குறிப்பாக பொருந்தும். நீதி மற்றும் நேர்மையின் உயர்தரமான நிலையை திருக்குர்ஆன் எடுத்துக் கூறியுள்ளது.

(தொடரும்....)

......☆......☆......☆......

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 17 February 2022 Issue No. 7

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப் பயணம் 2013

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

### நியூஸிலாந்து பாராளுமன்றத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

கடந்த நூற்றாண்டில் நடைபெற்ற முதல் இரண்டு உலகப் போர்களின் கசப்பான அனுபவங்களை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. அந்தப் போர்களில் குறிப்பாக இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவிற்கு நமக்கு உதாரணம் கிடைக்க முடியாது. வெறும் சாதாரண ஆயுதங்களை பயன்படுத்தி ஒளிமயமாக இருந்த நகரங்களும், ஊர்களும் முற்றிலும் நாசமாக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

அடுத்து இரண்டாம் உலகப் போரில் உலகம் ஒரு கொடூரமான சம்பவத்தை கண்டது. அதாவது ஜப்பானிற்கு எதிராக அணு குண்டு பயன்படுத்தப்பட்டது. அது எந்த அளவிற்கு நாசத்தை ஏற்படுத்தியது என்றால் மனிதன் அதன் விளைவுகள் தொடர்பாக சிந்தித்து அதிர்ந்து விடுகின்றான். ஹிரோஷிமா மற்றும் நாகசாகி அருங்காட்சியகங்கள் அங்கு நடைபெற்ற அழிவுகளையும், நாசங்களையும் நினைவூட்டுவதற்கு போதுமானதாகும். இரண்டாம் உலகப் போரின்போது 7 கோடி மக்கள் கொல்லப்பட்டனர். மரணிக்கக் கூடியவர்களில் 4 கோடி பேர் பொது மக்களாக இருந்தனர் என்று கூறப்படுகிறது. அதாவது இராணுவ வீரர்களை விட அதிகமாக பொது மக்கள் தங்களது வாழ்க்கையை இழந்துள்ளனர்.

அடுத்து, இந்தப் போரின் முடிவு மிகக் கொடூரமாக இருந்தது. போருக்குப் பிறகு மரணித்தவர்களின் எண்ணிக்கை லட்சங்களைக் கடந்தபோது அணு குண்டு வீசப்பட்ட பிறகு பல ஆண்டுகள் வரை புதிதாக பிறக்கும் குழந்தைகள் அந்த அணுகுண்டின் கொடிய தாக்கத்தின் காரணமாக அபாயகரமான அளவு வரை ஊனத்திற்கு இலக்காகி வருகின்றனர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இன்றைய காலத்தில் சிறிய நாடுகளிடமும் அணு ஆயுதங்கள் உள்ளன. மேலும் அந்த நாடுகளின் தலைவர்கள் அந்த ஆயுதங்களை பயன்படுத்துவதில் மிகவும் பொறுப்பற்றவர்களாக இருப்பது தெரிய வருகின்றது. அவர்களுக்கு தங்களின் பணிகளின் கொடிய விளைவுகளைப் பற்றி சற்றும் கவலை இல்லை என்றே தெரிய வருகிறது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இன்று நாம் மற்றோர் அணு ஆயுத போரைப் பற்றி சிந்தித்தால் நம் கண் முன்னால் வருகின்ற காட்சிகள் மனிதனை அதிரச் செய்து விடும். ஒரு மிக தீவிர அச்சத்திற்குள்ளாக்கி விடும். சிறிய நாடுகளிடம் உள்ள அணு குண்டுகள் இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட அணு குண்டுகளைக் காட்டிலும் அதிக வலிமை கொண்டதாக உள்ளன. உலகில் அமைதியை நிலைநாட்ட விரும்புகின்ற மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கு பணி செய்து வருகின்ற மக்களுக்கு மட்டுமே இந்த சிக்கலான மற்றும் அசாதாரண சூழ்நிலைகள் கவலைக்குள்ளாக்குவதற்கு காரணியாக அமைந்துள்ளன.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இன்றைய உலகத்தின் வேதனைக்குரிய நிலை என்னவென்றால், ஒரு பக்கம் மக்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கு பேசுகின்றனர். அதே நேரம் மற்றொரு பக்கம் தான் என்ற அகந்தையால் சூழப்பட்டுள்ளனர். ஆணவம் மற்றும் அகந்தையில் மூழ்கியுள்ளனர். வல்லரசு நாடுகள் தமது மேன்மையையும், வலிமையையும் நிரூபணம் செய்வதற்காக எல்லா சாத்தியமான முயற்சிகளுக்கும் தயாராக இருப்பதாகவே தென்படுகிறது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகில் நிரந்தரமான அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், எதிர்காலத்தில் போர்களிலிருந்து தப்பிப்பதற்கும் அனைத்து சமுதாயங்களும் இணைந்து ஓர் அமைப்பை உருவாக்கின. அதனை அவர்கள் ஐக்கிய நாட்டு சபை என்று கூறுகின்றார்கள். ஆனால் தெரிய வருவது என்னவென்றால், League of Nations தனது நோக்கத்தில் முழுமையாக தோல்வியுற்றதைப் போன்று இன்று ஐக்கிய நாட்டு சபையின் அந்தஸ்தும், கண்ணியமும் வீழ்ந்து கொண்டே செல்கின்றது. நீதியின் தேட்டங்கள் முழுமை செய்யப்படாவிட்டால் பின்னர் அமைதியை நிலைநாட்டுவதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் அமைப்புகள் உருவாக்கிக் கொள்ளட்டும். அவர்களின் அனைத்து முயற்சிகளும் வீணாகி விடும்.

நான் தற்போது League of Nations தோல்வியைக் குறித்து குறிப்பிட்டேன். முதல் உலகப் போருக்குப் பிறகு இந்த அமைப்பு உருவானது. உலகில் அமைதியை பாதுகாப்பது மட்டுமே அதன் நோக்கமாக இருந்தது. ஆயினும் அதன் பிறகும் கூட இந்த அமைப்பால் இரண்டாம் உலகப் போர் நிகழ்வதை தடுக்க முடியவில்லை. இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட நாசத்தையும், பாதிப்பையும் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டு விட்டேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்தப் போரின் விளைவில் நியூஸிலாந்திலும் மரணங்கள் நிகழ்ந்தன. நியூஸிலாந்தில் சுமார் 11,000 இராணுவ வீரர்களின் உயிர்கள் வீணாகின என்று கூறப்படுகின்றது. நியூஸிலாந்து உலகத்தின் மையப் பகுதியிலிருந்து தொலைவில் உள்ளது. எனவே இங்கு பொது மக்கள் மரணிக்கவில்லை. ஆனால் நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியதைப் போன்று ஒட்டுமொத்த அளவில் இராணுவ வீரர்களைக் காட்டிலும் அப்பாவி பொது மக்களே அதிகம் அழிந்து போயினர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அப்பாவி பொது மக்களில் எண்ணற்ற குழந்தைகளும், பெண்களும் எந்த குற்றமும் செய்யாமல் காட்டுமிராண்டித்தனமாக கொல்லப்பட்டனர் என்பதை எண்ணிப் பாருங்கள். உங்களுக்கு அதுபோன்ற நாடுகளின் மக்களின் உள்ளங்களில் அதாவது நேரடியாக அந்தப் போரின் தாக்கத்திற்குள்ளான மக்களின் உள்ளங்களில் இயல்பாகவே போருக்கு எதிரான ஒரு வெறுப்பு இருப்பது உங்களுக்கு தெரிய வரும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக தேசப்பற்றின் தேட்டம் என்னவென்றால், ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடக்கும்போது அதன் குடிமக்கள் தமது சமுதாயத்தின் பாதுகாப்பிற்காகவும், சமுதாயத்தின் சுதந்திரத்திற்காகவும் எல்லா வகையான தியாகங்களுக்கும் தயாராக இருப்பது கடமையாகும். ஆனால் அதே பிரச்சனைகள் நட்பு ரீதியிலான சூழலில் அமைதியான வழிமுறையில் பேச்சு வார்த்தை மற்றும் நுட்பமான ஞானத்துடன் தீர்க்கப்பட்டால் பின்னர் மனிதன் தேவையில்லாமல் கொலை மற்றும் கொள்ளையை விரும்பக் கூடாது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: முந்தைய காலங்களில் போர் நடைபெறும்போது பொதுவாக இராணுவ வீரர்களே கொல்லப்பட்டனர். அல்லது மிகக் குறைந்த பொது மக்களின் உயிர்களே பலியாகின. ஆனால் இன்றைய நாட்களின் போர் வழிமுறைகளில் விண்ணிலிருந்து குண்டுகள் பொழிவதும், விஷ வாயுக்கள் எந்த அளவுக்கென்றால், வேதியல் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நான் கூறியதுபோன்று மிகவும் அபாயகரமான ஆயுதமான அணு குண்டு கூட பயன்படுத்துவதற்கும் வாய்ப்பு உள்ளது. சுருக்கமாக தற்போதைய காலத்தின் போர் கடந்த கால போர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஏனென்றால் இன்றைய போர் மனித இனத்தையே பூமியிலிருந்து முற்றாக அழித்து விடும் ஆற்றல் பெற்றுள்ளது.

இந்த இடத்தில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக திருக்குர்ஆனின் போதனையை நான் எடுத்துரைக்கின்றேன். திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது: நன்மை, தீமைக்கு சமமாக முடியாது. தீமை நன்மைக்கு சமமாக முடியாது. நீர் மிக அழகிய வழிமுறையைக் கொண்டு எதிர்ப்பீராக. அப்போது எவருக்கும் உமக்குமிடையில் பகைமையுள்ளதோ அவர் அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகி விடுவார். (ஹாமீம் சஜ்தா:35)

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad